No. M. 2210 வருஷ சந்தா ரூ. 1-

வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 3



தனிப் பிரதி அணா 3.

...மோகினி ஆபீஸ்,
...26, தோடித் தெரு,
...ருவல்லிக்கேணி, மதராஸ்.

M30·7·3.
2/0020

... சித் தேதிக்குள் சஞ்சிகை

ஏழாவது ஆண்டு ! ஏழாவது ஆண்டு !!

ஜகன்மோகினி.

இதன் 7-வது ஆண்டு 1929௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட "சாருலோசனா" என்னும் அற்புதமான நாவலின் இரண்டாம்பாகமும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலி யுள்பட ரூ. 1-8-0 தான். "சாருலோசனா"வின் முதல்பாகம் சென்ற வாண்டின் கடைசி நான்கு சஞ்சிகைகளில் வெளிவந்ததால், புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் எட்டணா கூடச் சேர்த்து ரூ. 2 அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை **வி. பியில் அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகு மாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் **புதிய நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணா ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் **தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்**

மானேஜர்.

16 MAR 1931

அவ்வாறு திடுக்கிட்ட வாலிபன் சந்திரகாஸனை நோக்கி "ஐயா! தாங்கள் கூறியது எனக்கு வ்யக்தமாக தெரியவில்லையே! அதை தயவுசெய்து விவரமாகக் கூறுங்கள். இவளை நாள் காதலித்ததை இப்போது கூறவும் வெட்கமாக விருக்கின்றது. நான் இவளை எப்படி நேசித்தேன் என்பதை என்மனமறியுமேயன்றி வெளியிடச் சாத்தியமன்று. என்னுடைய அருமையான காதலை அறிந்திருந்தும் இந்தப்பாவி என்னை மோசம் செய்த வயிற்றெரிச்சலை நான் எவ்விதம் ஆற்றுவேன்? சண்டாளி! பாபிஷ்டி! என்னைத் தானும் நேசிப்பதாகப் பசப்பியதெல்லாம் வீண் வேஷம் என்பது இப்போதுதான் தெரிகின்றது. நான் அதை யறியாது உண்மை என்று நம்பி எனது அன்பை எல்லாம் இப்பாவியின்மீது வைத்துப் பாழாய்விட்டேன். ஐயா! தாங்கள் தயவு செய்து இந்த குலநாசகியின் வரலாற்றைக் கூறுங்கள். என்னை உங்கள் சகோதரன் போலப் பாவியுங்கள்." என்று மிகுந்த பரிதாபத்துடன் மொழிந்தான்.

இது கேட்ட சந்திரகாஸன் இராதாபாயின் சகலமான வரலாற்றையும் ஒன்றுவிடாது வெட்டவெளியாகக் கூறிப்பின், "ஐயா! கல்வித்திறத்திலும் அறிவிலும் தாங்கள் முதிர்ந்திருப்பதாகத் தெரிகின்றது. அத்தகைய தங்களுடைய மனத்திலும் இப்பாதகியை எண்ணவேண்டாம். இச்சண்டாளியை உங்கள் பரிசுத்தமான எண்ணத்தில் வைப்பதும் பெரும் பாதகமாகும். உம்மைப் பிடித்த சனியன் தொலைந்ததென்று எண்ணிச் சந்தோஷமடையும். உம்முடை அறிவுக்கும், ஆற்றலுக்கும், அழகுக்கும் தகுந்த மாதரசியை நானே தேடி மணம் செய்து வைக்கிறேன். எழுந்திரும். இனி நாம் இங்கு நிற்பதற்கும் போக்பதை இல்லை. உம்முடைய காதலை எல்லாம் வேறு மாதிடம் திருப்பும். சண்டாளித்துரோகியை எண்ணினும் தப்பிதம்; வாரும் போவோம்." என்று அழைத்தான்.

இவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த முதலியாருக்கு மனம் அபாரமாக வெறுப்புற்றுவிட்டதுடன் இதுபரியந்தம் தான் அநியாயமான வழியில் பழகிப் பாழாகிவிட்டதை எண்ணி வருந்தினார். இனிமேல் தான் இத்தகைய துராசாரமான செய்கையை

கைக்கொள்ளாது விலக்கித் தள்ளிவிடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். இராதாபாய் பெருத்த அவமானத்திற்குள்ளாகிவிட்டதுபோல தன்னுடைய கதியும் ஒருபோது முடிந்துவிடுமோ! என்கிற ஒரு திகில் மனத்தில் உதயமாகிவிட்டது. தன்னுடைய இழுக்கான—அசங்கியமான—செய்கைகளை யார் வெளியிலிழுத்து விடுவார்களோ! என்ன விகாரங்கள் நடந்துவிடுமோ! இந்தமட்டிடனேனும் தப்பித்துக்கொள்ளும் வழியைத் தேடவேண்டும்" என்கிற பெருத்த யோசனைகளுண்டாகி வதைக்கவாரம்பித்துவிட்டதால் அவர் முகமும் மனமும் மாறுபட்டுவிட்டன.

இந்த மாறுதலைக் குறிப்பாலறிந்த சந்திரகாஸன் ஒருவிதமாக நகைத்துக்கொண்டே, "முதலியாரே! ஏன் உமது முகம் மாறுபாடடைகின்றது? இம்மட்டுடன் உமது அட்டூழியங்களெல்லாம் மறைந்துவிடுமென்று நினைக்கிறேன். உம்முடைய உத்யோகத்தின் மதிப்பென்ன, நீர் செய்யும் அவகேடான காரியமென்ன? இவைகளை நினைக்க எனக்கே வெட்கமாயிருக்கிறது. சென்றது செல்லட்டும். நான் நேற்று உரைத்ததுபோல இன்றுடன் நீர் நல்வழியில் திருந்திவிடும். இப்பாவியை நீர் பணத்தின் நிமித்தம் இச்சித்ததால் இவளே உமக்கு நல்ல படிப்பினையைக் கற்பித்துவிட்டதுபோலாயிற்று. ஆகையால் இனியாகிலும் நீர் பழைய சதாசிவ முதலியாராக இல்லாமல் புதிய முதலியாராக ஆய்விடும்." என்றான்.

அங்கு வந்த வாலிபன் ராதாபாயை நோக்கி "அடீ, சண்டாளி! உன்னை உண்மையில் யோக்யமான கன்னிகை என்று நம்பி என்னுடைய மேலான அன்பு முற்றும் உன்பால் பறிகொடுத்துப் பாழாய்விட்டேனே! என்னருமைப் பெற்றோர்கள் எனது விவாகத்திற்குப் பலமுறை வற்புறுத்தியும் நான் உன்னை நம்பி அவர்களையும் பகைத்துக்கொண்டு சந்தியில் நின்றேனே! சிச்சீ! உன்னுடைய ஜென்மமும் ஒரு ஜென்மமா! உன் முகத்தில் விழித்தாலும் எனக்குப் பாபமே உண்டாகும்." என்று தன் வாயில் வந்தவாறெல்லாம் திட்டிவிட்டு சந்திரகாஸனிடமும் முதலியாரிடமும் சொல்லிக்கொண்டு புலம்பியபடியே சரேலென்று போய்விட்டான். அவ்வாறு சென்றவனை சந்திரகாஸன் வழிமறித்து அவனுடைய விலா

சத்தை வாங்கிக்கொண்டான். பிறகு வாலிபன் சென்று மறைந்தான்.

2-10020

சதாசிவ முதலியாரை அழைத்துக்கொண்டு சந்திரகாஸனும் வெளியில் சென்றுவிட்டான். முதலியார் சந்திரகாஸனைத் தன்னுடன் கூட வரும்படியாக பலவந்தம் செய்தமையால் அவருடன் முதலியாரின் வீட்டிற்குச் சென்றான். முதலியாருடைய தாய் தந்தையரும், மனைவியும் சந்திரகாஸனுடன் கூட தமது மகன் வெகு சாந்தமாக வருவதைக்கண்டு அபாரமான வியப்புற்று விஷயம் இன்னதென்பதை யறியாது திகைத்து நின்றார்கள்.

அவர்களைக் கண்ட சந்திரகாஸன் "பெரியீர்காள்! நேற்று நீங்கள் உங்கள் குமாரரைப்பற்றி என்னிடம் வயிறெரிந்து கூறியதற்குக் கடவுள் உடனே பலன் கொடுத்ததுபோல அவர் தமது பெருங் கொடிய இழுக்கான நடக்கையிலிருந்து திருந்திவிட்டார். என்னை நீங்கள் வேண்டிக்கொண்டதுபோல என்னால் கூடியவரையில் முயன்று அவருக்கு அநேக நன் மொழிகளைக் கூறி உண்மையை விளக்கி அவரை மாற்றிவிட்டேன்.பெரியவர்களே! கடவுளின் அருள் பெருகுங் காலத்தில்தான் யாவும் கைகூடும். அவருடைய அருட்டன்மை இப்போதே உண்டாயதுபோலும். இனி உமது குமாரர் முன்போன்று அநாசாரத்திலும் துன்மார்க்கத்திலும் ஒழுகாது நன்மார்க்கத்தில் ஒழுகி நன்னீதியைக் கடைபிடித்து நாயகியுடன் இல்லறம் நடத்தி நற்புத்திரராக இலங்கப்போகிறார். அந்த இராதாபாயின் பவிஷை இவருக்கு நேருக்குநேர் விளக்கினேன். அவைகளை நேருக்குநேர் கண்டறிந்த பின்னர் இவர் மனம் வெறுத்துவிட்டார். அதை இவருடைய செய்கையினாலேயே தெரிந்துகொண்டேன். இனிமேல் நீங்கள் ஒரு சிறிதும் கவலைப்படவேண்டாம். இவர் தமது ஒழுக்கமற்றத் தன்மையைத் தெரிந்துகொண்டு வருந்தியதால் இவரை நான் இச்சமயம் சும்மாவிட்டேன். இவர் இம்மட்டுடன் நல்வழியில் இருந்தாது பழய மாதிரியே இருப்பாரானால் நான் இவருடைய லீலைகளையும் முக்யமான மனிதர்களின் முன்னிலையில் உடைத்து நீங்கள் நேற்று இராதாபாயிக்குச் செய்த மரியாதையைப் போல செய்ய ஏற்பாடு செய்வேன். இது உண்மையே!" என்று

சந்திரகாஸன் கூறி வாய்மூடு முன்னர், முதலியார் பயந்து நடுநடுங்கிப்போய் சந்திரகாஸனின் இரு கைகளையும் பற்றிக்கொண்டு "அன்புடையீர்! தங்களையே நான் தெய்வமாக நம்பி இருக்கிறேன். என்னைத் தாங்கள்தான் காப்பாற்றவேண்டும். மகா தூர்த்தனாயும், துராசாரனாயும், துன்மார்க்கனாயும் இருந்த எனது காலங்கள் முற்றும் இறந்தனவென்று சத்தியமாக எண்ணுங்கள். நான் இனி புனர் ஜென்மம் எடுத்ததுபோலாய்விட்டேன். என்னுடைய வார்த்தையை நம்புங்கள். நான் என்னை யறியாமலோ, அறிந்தோ செய்த பிழைகள் அநந்தம். அந்த குற்றங்களுக்கெல்லாம் கடவுளிடத்தில் நான் தக்க சிக்ஷையே அடைவேன். என் மதியழிந்த நாளை நான் வெறுக்கின்றேன். இனிமேல் நான் உலகத்தவர்களைப் போல நன்மார்க்கத்திலீடுபட்டு நற்குணனென்கிற பெயரை ஏற்றிடும் வழியில் நடக்கின்றேன். தயவுசெய்து என்னுயிரைக் காப்பாற்றுவதுபோல என் மானத்தைக் காப்பாற்றவேண்டும். நான் மிகவும் கெஞ்சி மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னைக் கைவிட்டுவிடாதீர்கள்." என்று சந்திரகாஸனிடம் புலம்பிப் பின், தனது தாய்தந்தையின் காலில் விழுந்து, "என்னருமைப் பெற்றோரே! நான் உங்களுடைய அருமையான உதரத்தில் ஜனித்தும் இதுபரியந்தம் தமக்கு மகனாக இராது மாபாவியாகித் திரிந்து உங்களை வருத்திவிட்டேன். என்னுடைய இருள் சூழ்ந்த—இறுமாப்படைந்த—மதியைத் திருப்பி என்னைக் காப்பாற்றிய இப் புண்ணிய சீலரின் உபதேசத்தினால், முயற்சியினால் நான் ஒரு மனிதனானேன். அந்தோ! இராதாபாயின் இப்போதிய கதியை நினைக்க என்னுள்ளம் உருகுகின்றது. என் மனம் அந்த பயங்கரத்தை எண்ணி நடுங்குகின்றது. என்னையும் இவர் அந்த விதமான கதிக்கு இலக்காக்கி விடுவாரோ, என்கிற திகிலும், பயமும், ஒரு குழப்பமும் என்னை யறியாது என் மனத்தில் புகுந்து வேலை செய்கின்றன. மிகவும் கொடுமையான பள்ளத்தில்—மீள வழி யில்லாத படுகுழியில்—வீழ விருந்த என்னைக் காப்பாற்றிய இவருக்கு நான் பதினாயிரம் வந்தன மளிக்கின்றேன். என் மதி என்னை யறியாமலே கெட்டுவிட்டது போல இப்போதும் என்னை யறியாது திருந்தி விட்டதற்கு நானே என்னைப் பற்றி

வியக்கின்றேன். அருமை அன்னாய்! அருந்தவத் தந்தாய்! என் பிழைகளைப் பொறுத்து என்னைக் காப்பாற்றவேண்டும். என்னுடைய ஆபாசத்தை வெளியிடாது அப்படியே அடக்கிவிட வேண்டுகிறேன். வெந்த புண்ணில் வேல் பாய்வதுபோல என்னுடைய நொந்த மனத்தில் தைக்கும்படியான வார்த்தைகளால் என்னை வருத்தாது என்னை க்ஷமிக்கக் கோருகிறேன். என்னுடைய அட்டூழியத்தைக் கட்டுடன், திட்டமாகத் தெரிந்துவிட்டேன்—கவலைப்பட்டேன். இனி எது செய்தும் சென்ற நாளை மாற்ற விபலாது. இனி நான் பரிசுத்தமாய் இருக்கும்படியாக அனுக்ரகம் செய்யுங்கள். பதிதன் என்று புறக்கணிக்காதீர்கள். "பொல்லாத சேய் எனில் தாய் தள்ளல் நீதமோ! புகலிடம் பிறிது முண்டோ!" என்ற தாயுமானரின் வாக்கைப் பரிபாலியுங்கள். இத்தனை நாளாக நான் கடையனிலும் கடையனாகி விட்டேன். இனி அவ்வாறிருக்க மாட்டேன். என்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டு பின், தன் மனைவியினருகில் சென்று, அவளைக் கட்டி யணைத்து "என் கண்ணே! நல்ல பத்தரை மாற்றுத் தங்கத்தின் மதிப்பறியாது பித்தளையின் மீது நாட்டங் கொண்டு திரிந்த பாதகனென்பதை நானே அறிந்தேன். இனி உன்னைக் கைவிடேன். உன்னுடைய தீய காலம் ஒழிந்தது. இனி கவலைப்படாதே! இரவு பேசிக் கொள்வோம்" என்று தேறுதல்கள் கூறிப் பின் சந்திரகாஸனிடமே வந்தார்.

தாங்கள் சிறிதும் எதிர்பாராத விதமாக தமது மகன் நல்வழியில் திருந்தி விட்டதைக் கண்ட பெற்றோர்களின் மனத் தாமரை விகசித மடைந்ததைக் கூறவேண்டுமா? மகன் மீதிருந்த வெறுப்பெல்லாம் விருப்பாகி விட்டது. அவனுடைய வார்த்தைகளால் மனம் இளகிவிட்டது. சென்றதை இச்சமயம் கூறி வருத்துதல் அழகல்லவென எண்ணி மகனைத் தடவிக் கொடுத்து "அப்பா! எங்கள் குலவிளக்கு அவிந்துவிட இருந்ததை ஏற்றி வைக்க முன் வந்த இந்த மகானுபாவனுடைய முயற்சியைத் தான் புகழ்ந்து பாராட்டவேண்டும். இவருடைய வீர தீர சாமர்த்தியத்தை நான் நேற்றே அறிந்துவிட்டேன். (என்று நேற்று இராதா

பாயின் விஷயமாக நடந்த வரலாறு முற்றிலும் கூறி) இத்தனை காரியமும் இந்த மனிதர் தாமாகச் செய்த வேலை" என்று கூறக் கேட்டதும், முதலியார் திடுக்கிட்டார். "என்ன, என்ன! தாங்களா எனக்கு நேற்று வந்த கடிதங்களை அனுப்பினீர்கள்? அந்த படவாவைத் தாங்களா இவ்விதம் அவமான முறச் செய்தீர்கள்? என்ன ஆச்சரியம்! பத்ரிகையில் இவ் விஷயத்தை ப்ரசுரித்ததும் தாங்களா! ஒவ்வொரு வேலையும் அபாரமான வல்லமையோடு செய்திருக்கின்றீர்களே! ஆகா! இத்தகைய வீரனை விலக்கிவிட்டா அந்த பாதகி இவ்விதமாகக் கெட்டலைந்து பாழாய் விட்டாள்! நண்பரே! உம்முடைய முயற்சியால் எனது ஜென்மம் சாபல்யமானதை எண்ணி மகிழ்ச்சி யடைகின்றேண். இன்று முதல் நீர் என்னுடைய உடன்பிறந்தவர் போலாய் விட்டீர். தாங்கள் இவ்விடத்திலேயே இருக்கவேண்டும். இவ்விடத்திலேயே தமது ஜாகையை வைத்துக்கொள்ளலாம். அதோடு எனது ஆபீஸில் தக்க பெரிய மனிதரிடம் தெரிவித்து உமக்கு உயர்தரமான வேலை செய்து வைக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று நிரம்பவும் கனிவுடன் கூறினர்.

இதைக் கேட்ட சந்திரகாஸன் அபாரமான மகிழ்ச்சி யடைந்து, "முதலியாரே! தாங்கள் இம்மட்டுடன் நல்வழியில் திருந்திவிட்ட ஒன்றே எனக்கு அளப்பரிய சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. நான் எங்கிருந்தாலும் விச்வாசம் மாறாதிருந்தால் போதும். அன்பும் சிநேகமும் காரணமே யன்றி அபரிமிதமான உபசாரம் அவசியமில்லை. உம்முடைய பெற்றோரின் மனக் கவலையும், மனைவியின் குறையும் நீங்கியதற்கு நான் நிரம்பவும் ஆநந்த மடைகின்றேன். இவ் வானந்தத்தை எனக்கு என்றும் நிலைக்கும்படியாகச் செய்தால் போதும். நான் ஏதோ கடவுளின் கருணையால் பி.எ.,பி.எல்.,எல்.டி., எல்லாம் பாஸ் செய்திருக்கிறேன். இப்போதும் எம். எ. பரிக்ஷைக்கு படித்துக்கொண்டுதானிருக்கிறேன். காலைய தேதியில் நான் ஒரு வக்கீலை அடுத்துப் பழகினல் அத்துறையில் என்னுடைய ஜீவியம் நடக்கும் மார்க்கத்தைக் கடவுள் அளிப்பார். ஆகையால் அது விஷயத்தில் தாங்கள்

ப்ரயாசைப் படவேண்டாம். நான் சென்று வருகிறேன். மீண்டும் ஒழிந்த காலத்தில் வந்து பார்க்கிறேன்" என்று கூறிவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

அங்கு இராதாபாய் மூர்ச்சித்து விழுந்தவள் வெகு நேரம் வரையில் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கவில்லை. கிழவியின் உபசாரத்தினுல் பிறகு சிறிது மூர்ச்சை தெளிந்தது. அவளுடைய நிலைமையை விவரிக்கவே சாத்யமன்று. தான் தனது ஸ்திரீ தர்ம மென்கிற வரம்பு மீறி நடந்து விட்டதின் பலன் இது என்பதை முற்றிலும் தெரிந்துகொண்டாள். இது பரியந்தம் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கிற நான்கு வகைப் பொருள்களும் அவளை விட்டு நீங்கி இருந்தன. அவை யெல்லாம் தற்போது ஒரே அடி யாக வந்து சுற்றிக்கொண்டன. அவளுடைய செய்கைகள் முற்றும் அவள் கண்ணெதிரில் தோன்றி ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஈட்டி போலக் குத்த வாரம்பித்தன. அவைகளை நினைக்குந்தோறும் அவளுடைய உயிரே நீங்கிவிடும் நிலைமைக்கு வந்துவிட்டது. அவளுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்ட கிழவிக்கும் அவளுண்டைய நாட்டுப் பெண்ணுக்கும் ஒருவிதத்தில் மனமிரக்கமும் ஒரு விதத்தில் வெறுப்பும் உண்டாகி வதைக்கின்றது. மணி காலை 11 ஆய்விட்டது. இறந்த குழந்தையை அடக்கஞ் செய்வதற்கு நேரமாய்விட்டதால் கிழவி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து பகல் ஒரு மணிக்குள் அந்த வேலையை முடித்து குழந்தையை அடக்கம் செய்துவிட்டாள்.

இராதாபாய் அச்சமயம் கதறியதை நாம் விவரிப்பதுச் சாத்யமன்று. அந்த கோரக் காக்ஷியை அம் மட்டுடன் விட்டு விடுவோம். குழந்தையை விடமாட்டே னென்று அவள் கதறினள்; முட்டிக்கொண்டாள். பிறகு எல்லாம் முடிந்ததும் கிழவி வீட்டி லேயே அன்று பகல் பூராவும் புலம்பிக்கொண்டு படுத்திருந்தாள். இனி நான் என்ன செய்வது? எவ்வாறு உய்வது? நமது கதி இவ்விதம் அதோ கதியாகி விடும் என்று கனவிலும் கருதவில்லையே! ஐயோ! பாழாய்ப் போன அகம்பாவத்தினுலல்லவா இத்தகைய அவதிக்குள்ளானேம். நம்முடைய சகலமான ரகஸியங்களும்

குபீரென்று வெளியாகிவிட்டன. இனி நாம் எவ்விதம் உயிர் வாழ்வது? பிறர் முகத்தில் எவ்வாறு விழிப்பது? ஹா! கஷ்டகாலம் இவ்விதமும் வந்து மூண்டு விடுமா! கடவுளால் நியமிக்கப்பட்டு அக்னி சாக்ஷியாக மணந்த கணவனை நாம் அவமதித்துத் தள்ளிய தோடு, விவாகமே ஆகவில்லை என்றல்லவா நடித்து மோசம் செய்தோம். அந்த ஒரு காரியத்தின் பலன் என்னைத் தாக்கா திருக்குமா! ஐயோ! என்ன செய்வேன்? இனி உயிரை விடுவதைத் தவிர வேறு வழி யில்லை. மானமழிந்தபின் வாழாமை முன்னி னிதே; என்றபடி மானம் போன பிறகு வாழ்வாருண்டா! வாழ்ந்தால் உலகம் நம்மை எள்ளி நகையாடாதா? என்ன மதியீனயாகி மாபெரும் படுகுழியில் விழுந்துவிட்டேன்? ஆகா! ஏற்கெனவே முன்னோர்கள் ஸ்திரீகளுக்கென அளித்துள்ள சுதந்தரத்தை நாம் விட்டு அபரிமிதமான துறையில் ப்ரவேசித்து அதிகரித்த சுதந்தரங் களில் மூழ்கி இத்தகைய கதிக்கு ஆளாய் விட்டோமே! என்ன செய்வேன்?' என்று ஏங்கிக் கதறினாள். இவளுடைய சகலமான ரகஸியங்களும் மோட்டார் ஓட்டிக்கு மட்டும் தெரியுமாதலால் அவன் இவ்வீட்டிற்கு வந்து வண்டியில் இராதாபாயை ஏற்றி அவளுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அவள் தன் னுடைய வீட்டிற்குச் செல்வதற்கும் மிகுந்த வெட்கமடைந்து தவித்தவாறு சென்று படுத்துக்கொண்டாள். மோட்டார் வண்டி யோட்டி இராதாபாயிக்கு அநேக தேறுதல்களைக் கூறி சாப்பிடும் படியாக வேண்டியதெல்லாம் வீணாயிற்று. அவளுக்கு என்ன செய்வதென்பதே தோன்றவில்லை. சிந்தித்துச் சிந்தித்து தலை நோவு எடுத்துக்கொண்டது. தான் இச்சமயம் இவ்வூரையேனும் விட்டு வெளிச்செல்லவேண்டும்; அன்றி உயிரையேனும் விட்டுவிட வேண்டும். இவ்விரண்டையும் தவிற வேறு வழி ஒன்றுமே தோன்றவில்லை. ஆகையால் தனக்கு முக்யமான சகல சாமான்களை யும் எடுத்து பெட்டியில் தயார் செய்துகொண்டு தன் தந்தையிடத் தில் போய் சேருவதென்று தீர்மானித்து அதற்கான சகல ஏற்பாடு களையும் செய்துப் பின் புறப்படுவதற்காகத் தயாரானாள்.

அச்சமயம் "ஆ! இராதாபாய், இராதாபாய்! என்று கூவிக்

கொண்டே ஒரு மனிதர் உள்ளே ஓடி வந்தார். அவரைக் கண்ட இராதாபாய் திடுக்கிட்டு "ஐயோ! ஒன்று நினைக்க ஒன்றாகிவிட்டதே! இவர் நம்முடைய ரகஸியம் தெரிந்துதான் வந்தாரோ! அன்றி சாதாரணமாகத்தான் வந்திருக்கிறாரோ, தெரியவில்லையே! இவருடைய தோற்றத்தைக் கண்டால் இவர் ஏதோ விஷயமறிந்து வந்திருப்பதுபோலத் தோற்றுகின்றதே; என்ன செய்வேன்?" என்று நடுங்கிப்போய் அங்கு வந்தவரின் கால்களில் "அப்பா!" என்று கூவிக்கொண்டே விழுந்தாள்.

இவள் விழுந்ததைக் கண்ட இராதாபாயின் தந்தையாகிய பரிமளநாதர் என்பவர் அவளைத் தூக்கி நிறுத்தி "ஐயோ! இராதாபாய்! இதோ இத்தந்தியைப் பார். இதிலுள்ள விஷயங்கள் உண்மையா! இதைக்கண்டு நான் என்னுள்ளம் துடித்து ஓடி வந்தேன். இதை யார் அடித்திருப்பார்?" என்று கூறிக்கொண்டே தந்தியைக் காட்டினார். தந்தி என்றதும் ராதாபாய் நடுங்கிப்போய் அதை வாங்கிப் படிக்கலானாள். அது பின்வருமாறு :—

"உங்கள் புதல்வி திருட்டுத்தனமாகப் பெற்று வளர்த்த பிள்ளை, இன்று இறந்துவிட்டதாலும் அவள் இன்னும் சில ஆபத்துக்களில் சிக்கி அவமானமுற்றுத் தவிப்பதாலும் உடனே வரவும்.

உண்மையாளன்."

அதைப் படித்ததும் அவளுடைய வயிற்றுக்குள் பெருந்தீ மூண்டது போலாய்விட்டது. தன்னுடைய இரகஸியங்களை எல்லாம் அறிந்த தன் புருஷன்தான் இதை அடித்திருக்கிறான் என்று அவள் நொடியில் தெரிந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்துகொண்டு தத்தளிக்கையில், அவள் கனவிலும் எதிர்பாராதவிதமாய் சந்திரகாஸனும் முதலியாரும் அவ்விடம் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் அவளுடைய பதைப்பும் துடிப்பும் அபாரமாகப் பெருகி அவளைக் கொன்றுகொண்டே இருக்கின்றன. அவள் முதல் நாளைய மாலைப் பொழுதிலிருந்து பட்ட சங்கடங்களால் ஏற்கெனவே கருகியுருகி விட்டாளாகையால் இவர்கள் ஏக காலத்தில் வந்துவிட்டதையும்,

அந்த தந்தியையும் கண்டு ஒருங்கே தாங்கமாட்டாத விசனத்தை யடைந்து அப்படியே மூர்ச்சையாய்விட்டாள்.

ராதாபாயின் தகப்பனர் தன் மகளுடைய மாறுபாட்டையும் அவள் மூர்ச்சையாய்விட்டதையும் கண்டு ஒன்றுமே தோன்றாமல் திகைத்தார். திடீரென்று சந்திரகாஸன் அங்கு வந்ததையும் கண்டு வியப்புற்று நின்றார். அடுத்த நிமிஷம் தமது மகளைத் தூக்கி ஒரு சோபாவில் கிடத்திவிட்டு சந்திரகாஸனை நோக்கி, "நீ சந்திரகாஸனல்லவா!" என்று ஒருவிதமாகக் கேட்டார்.

இது கேட்ட சந்திரகாஸன் குற்றலான பார்வையுடன் நகைத்துக்கொண்டே "நான் சந்திரகாஸனுக ஒரு காலத்திலிருந்தேன். இப்போது நான் தந்திரகாஸன் என்று சொல்லக்கூடியவனுக இருக்கிறேன். ஐயோ! பாவம். உங்கள் பேரனை அடக்கஞ்செய்தாய்விட்டதே! தாங்கள் பார்த்துக் களிக்க பாக்கியம் செய்யவில்லை என்று தான் கூறவேண்டும்." என்றான்.

பரிமளநாதர்:—என்ன! என்ன! என்னுடைய பேரன் இறந்து விட்டதா! என்ன உளறுகிறாய்! இந்த அபாண்டமான தந்தியை நீதான் எனக்கடித்தாயோ!

சந்திர:—ஆமாம்! நானே தான் அடித்தேன். கேவலம் ஒரு பெண்பிள்ளைக்கு நீர் இத்தகைய சுயேச்சாதிகாரம் கொடுத்து அவளைத் தனித்த வாசம் செய்வித்ததின் பலனை நீரே நேரில் பார்க்கும் பொருட்டாகவே தந்தி யடித்தேன், (என்று இராதாபாய் விஷயங்களை எல்லாம் கூறி) இவ்விதமான அலங்கோலங்கள் நடந்து விட்டதை இனியேனும் உணரும். இந்த பெண்ணினுடைய அட்டூழியங்களை எல்லாம் ஒரு சிறிதும் கவனிக்காமல் விட்டுவிட்டதன் பலன் இது. இந்த இரகஸ்யங்கள் பலர் முன்னிலையில் வெளியாய் விட்டபடியால் இனி இவற்றை மறைக்க ஒருவராலு மியலாது. நான் ஏழையாய் விட்டேன் என்கிற ஒரு அலக்ஷியத்தினுல் நீரும் என்னை மதியாது விலக்கி விட்டதுடன் உமது பெண்ணை அவ்வகையிலேயே பழக்கி விட்டதற்குப் பலன் இது தான். நான் ஒரு சமயம் உம்மை 50 ரூபாய் கேட்டுக் கடிதம் எழுதிய

தற்கு எத்தனை பிச்சைக்காரப் பயலென்றும், பேமானி என்றும் வாயில் வந்தவாறெல்லாம் திட்டி எழுதிய கடிதத்தை இப்போதும் ஒரு ரிகார்டு போல வைத்திருக்கிறேன். என்னுடைய பிச்சைக் காரத் தன்மையிலேயே நான் உயர்தரக் கல்வி கற்று, பாஸ் செய்து, மானமாகவே ஜீவித்துத் தான் வருகிறேன். தற்போது உங்களுடைய பிழைப்புதான் பேமானித்தனமாயும், காண்போர் காறியுமியும் தன்மையாயும் ஆய்விட்டது. எளியேனாகிய என்னைச் சொல்லிய சொல் வீணாகுமா! கடவுள் ஒருவனில்லையா! அவனுடைய செயல் நல்லார்க்கு நன்மையும், பொல்லார்க்குத் தீமையுமாகத் தான் விளையும். இது உலகறிந்த விஷயம். ஒரு பெண் பிள்ளையை வைக்கவேண்டிய நிதானத்தில் வைத்து எம்மட்டும் செல்வமும், சுதந்தரமும், செல்வாக்கும் கொடுக்கலாகுமோ அந்த மட்டில் கொடுத்தால் எத்துணை நலம் பெற்றிருக்கலாம்? ஆடவர்களுக்கே தன்னூரில்லாது அயலூரில் தனித்து வாசம் செய்வது சில சமயம் அபாயமாயும், பயமாயுமிருக்கிறதென்றால் ஒருவருடைய காவற்குள்ளேயே இருக்கவேண்டிய பெண்பிள்ளையை நீர் இவ்விவிதம் காவலற்றுப் பெரியார் துணை யற்று, கேவலமாக விட்டு விட்டதன் பயனால் இந்த தீராத அவமானத்திற்கு இலக்காகி விட்டீர்கள். அந்தச் சண்டாளி என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளச் செய்த ஒரு அவமானத்திற்கு நான் அவளை இந்த மட்டுடன் செய்தது சிறிதும் போதாது. என் மனம் அத்தகைய ஆத்திரத்தை அடைகின்றது. பாழாய்ப் போன பணக் கொழுப்பு மிஞ்சியதனால் அல்லவா இத்தகைய கொடிய துணிபு பிறந்துவிட்டது! பணத்தின் துர்க்குணத்தாலுண்டாகிய துர்மணம் அநேகமாக அனேக விடங்களில் மறைந்து விடுகின்றன; அதுபோல இவ்விடத்திலும் இதுபரியந்தம் மறைந்துதான் வந்தது. அதற்குக் காலனாக நான் வந்து சேர்ந்தேன். இருள் மூடிய காலத்தில் சந்திரோதயமானதும் இருள் விலகுவதே போல இந்தப் பாதகியுடைய அநியாயச் செய்கையாகிய இருளை யொழிக்க சந்திரகாஸன் நான் வந்து சேர்ந்தேன். விவாகமான பிறகு கன்னிகை என்று நடிப்பதும், திருட்டுப் பிள்ளையைப் பெற்றுத் திருட்டுத்தனமாக வளர்ப்பதும், இன்னும் மற்ற

ப்ரமுகர்களே மணப்பதாகக் கூறி பறை சாற்றுவதும், மான ஹீனம் விட்டுத் திரிவதும், ஆகா! எத்தனை நன்மையானவை! எத்துணை எழில் வாய்ந்தவை! இத்தகைய செய்கைகளினுல் என்ன உபயோகம் கிடைக்குமோ, அது தான் கிடைத்தது. "வினை விதைத்தவன் வினை அறுக்கிருன். தினை விதைத்தவன் தினை அறுக்கிருன்" என்ற பழமொழி சிறிதும் பொய்யாகுமா! ஏன்? திருகத் திருக விழிக்கின்றீர்கள்?" என்று படபடத்துக் கூறினுன்.

இந்த அதிசயமான வரலாற்றினைக் கேட்ட பரிமளநாதர் அபாரமான வியப்பும் திகைப்பு மடைந்து அப்படியே நின்று விட்டார். "இவைகளெல்லாம் உண்மையானவையா! தன் மகள் இவ்வாருன ஆபாஸ முறையில் இறங்கி இருப்பாளா!" என்று பெருத்த யோசனை யுண்டாய்விட்டது. அவர் இன்னவிதமாகப் பேசுவதென்பதே தெரியாமல் திகைத்தார். தந்தியைக் கண்டதும் ராதாபாய் முகமடைந்த மாறுதலைக் கவனித்தார். உடனே இவர்களைக் கண்டதும் அவள் மூர்ச்சையாய் விழுந்துவிட்டதையும், இவர் கூறியதையும் ஒத்திட்டுப் பார்த்தால் ஏதோ விசேஷம் நடந்து தானிருக்கவேண்டும், என்று நினைத்தார். இவ்வாருன குழப்பத்துடன் அவர் தனது புதல்வியை மூர்ச்சை தெளியச் செய்தார். ராதாபாயும் ப்ரக்ஞை யுண்டாகி எழுந்தாள். அவளைக் கண்ட அவள் பிதா சற்று ஆத்திரமுற்ற தொனியுடன் பேசத் தொடங்கி "அடீ, இராதா! இப்போது நான் அறிந்த விஷயங்களினுல் என் மனம் சொல்ல வறியாத வேதனையினுல் கொந்தளிக்கின்றது. என்னுடைய மானம் நீங்கிவிட்டதாகவே தோன்றுகின்றது. நீ இப்போது நடந்தவற்றை அப்படியே கூறப்போகின்ருயா, இல்லையா! எனக்கு இப்போதுள்ள நிலைமையில் எனது உயிர் நீங்கி விடும் போல விருக்கிறது; என்னுல் தாங்கக் கூடவில்லை. உண்மை யாது? ஒளியாது உரைத்திடு". என்று கடிந்து கேட்டார்.

இதைக் கேட்ட இராதாபாய் நடுநடுங்கினுள். "நான் என்ன விதம் பதில் கூறுவது? ஐயோ! என் கதி இவ்விதமாகவா முடிந்து விட்டது. பெற்ற தந்தையாயினும் நான் உண்மையைக் கூசாது

எவ்விதம் உரைப்பேன்? என்னுவே என்னைத் தடைசெய்கின்றதே! இனி ஒளிப்பதென்பது சொப்பனத்திலும் ஆகாத காரியம். என்ன செய்வேன்? என் ப்ராணன் போய்விடலாகாதா! என் மதியழிந்ததே போல ப்ராணன் அழிந்து விடலாகாதா!'' என்று தனக்குள் தபித்துப் புலம்புகின்றாள். தனது இரு கரத்தினாலும் முகத்தைக் கெட்டியாக மூடிக்கொண்டாள். விம்மி விம்மிப் புலம்பிக்கொண்டே "அப்பா! அப்பா! பாவி என்னைத் தமது மகளல்லவென்று எண் ணும். மனோதிடமும், அடக்கத் தன்மையும், உறுதியான சித்தமும் இல்லாத சண்டாளி நான் சுதந்தரம் வகித்து, நாகரிகப் புற்றில் இறங்கி நாசமாய்விட்டேன். இதற்குமேல் என்னை யொன்றும் கேளாதீர்கள். என்னைத் தாங்கள் மகள் என்று இனி பாவிக்கவேண்டாம். கட்டிய கணவனை அவமதித்ததன் பலன் இது என்பதை நான் நன்குணர்ந்துகொண்டேன். பண்டைய பழக்கங்களையும், தாய்ப்பாஷையையும், பெரியார் என்ற மரியாதை யையும், பெண்களின் தன்மையையும் கணவனின் மாண்பையும் இன் னும் மற்ற எல்லாவற்றையும் அறவே மறந்து அகம்பாவம் பிடித் துத் திரிந்தேன். அதற்குத் தாங்களே துணையிருந்ததுபோல என்னை விட்டு விட்டீர்கள். என் வினையும் என்னைத் தாக்கியது. எல்லாம் ஒன்றுகூடி என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டது. முதலி லிருந்தே மக்களை மாதாபிதாக்கள் அடக்கியாண்டு நல்வழியில் பழக்கி இருந்தால் இத்தகைய துணிபும் துர்க்குணமும் ஒருபோ தும் உண்டாகாது. இதற்குக் காரணம் ஆதியில் தாங்கள் பழக்கி யதும் கூடிக்கொண்டது. என்னை மிகவும் சுயேச்சையாகத் திரிய வைத்துவிட்டீர்கள். ஆயினும் உங்கள்மீது தப்பிதமில்லை. என்னுடைய வினையே என்னை அவ்விதமெல்லாம் செய்யும்படியாகத் தூண்டிவிட் டது. உம். அதைப்பற்றி இனி கூறிப் பயனில்லை. என்னுடைய வயிற்றெரிச்சலை நீங்கள் பின்னும் கிளப்பாதீர்கள். என்னை இறந்து விட்டதாக எண்ணுங்கள்.'' என்று சிறிது ஆத்திரமும் துக்கமும் ஒன்றுகூடியவாறு கூறினாள்.

இதைக் கேட்ட பரிமளநாதர் அபாரமான ஆத்திரமும், அரு வருப்பும் கொண்டு, "அடி! துஷ்டக் கழுதை! உன்னை நான் இவ்

விதம் பாழாகவேண்டுமென்ற நோக்கங் கொண்டா வளர்த்தேன்? என்னுடைய உயிரெல்லாம் நீயாக பாவித்து நான் உன்னை வெகு செல்வமாக வளர்த்ததெல்லாம் இத்தகைய தீங்காகவா முடிந்தது! 'உன்னுடைய மனமும் எண்ணமும் சுத்தமாக விருந்தால் என் கேடுகள் சம்பவிக்கும்?' என்ற எண்ணத்தினல் உனக்கு நான் கொடுத்த சுதந்தரம் எமனுக ஆய்விட்டதே! உன்மீதுள்ள அன்பினல்—வாத்ஸல்யத்தினல்—என்னுடைய முக்ய மனுஷ்யர்களை எல்லாம் துறந்து த்வேஷித்துக் கொண்டேன். என் தமையன் முறையாகிய கங்காதரர் உன்னைத் தனிமையில் விடலாகாதென்று எவ்வளவோ கூறியதை நான் அசட்டை செய்து அவரை விரோதித்துக் கொண்டு உன் மனப்போக்கின்படியும், தற்கால நாகரிகத்தின் படியும் உன்னை நான் வளர்த்ததற்கு என்மீதே நீ பழியைச் சுமத்துகிறுயே அடி, குலத்ரோகி! உன்னை நான் எத்தனையோ மேன்மையான படிப்பில் தேற வைத்ததன் பலன் இதென்று விளக்கிவிட்டாயே! உன்னுடைய மனம் உறுதியாயும், சபலமில்லாமலும் இருக்கும் பக்ஷத்தில் பிறரைப் பழிப்பதேதுக்கடி? இத்தகைய மனேதிடமற்ற நீ சுயேச்சை வகிக்க முன்வந்ததானது உன்னுடைய மதிப்பையும், மானத்தையும், உனக்கு உற்ற சுதந்தரத்தையும் நீயே குலைத்துக் கொண்டது போலாய்விட்டதே! ஐயோ! நானும் நாகரிக முறையில் பழகிய போதிலும் இவ்வித அவகேடான காரியம் செய்வதற்கு என் மனமிசையாதே! அடி பாவி! உன்னல் நான் உயிர் விடவேண்டிய நிலைமையில் வந்து விட்டேனே! எனக்குத் தாங்கமாட்டாத தலை குனிவு உண்டாய் விட்டதே! என்ன செய்வேன்? 'இன்னருடைய பெண் இத்தகைய துன்மார்க்கியாம்' என்று பிறர் தூற்றும்படியாக ஆய்விட்டதே! இனிமேல் உன்னை ஒரு க்ஷண நேரமும் நான் தனித்து விடமாட்டேன். ஜாதிப்ரஷ்டையாக நீ ஆய்விட்டாய். இருப்பினும் என்னிருப்பிடத்திலேயே நீயும் உன் காலத்தைத் தொலைக்க வேண்டுமே யன்றி மற்றபடியில் உனக்கு வேறு கதி கிடையாது. உன்னை நீயே பலவிதத்திலும் பாழாக்கிக் கொண்டாய். இனி நீ ஒருவராலும் மதிக்கப்பட யோக்யதை யற்று விட்டாய். யாவரும் விலக்கப்பட்ட அநாசாரப் பண்டமாகிய உன்னைப் பெற்ற பாசத்திற்காக நான்தான் காப்பாற்றித் தொலைக்க

வேண்டும். நீ ப்ராணனை விட்டுவிட நினைக்கிறாய்! அது சரியில்லை. எத்தனை ஜன்மத்துப் பாபங்களின் உருவமோ உன்னை இக்கதிக்கு ஆளாக்கியது. இது போதாது தற்கொலை புரிந்து அடுத்த பிறவிக்கும் ஆஸ்தி சேகரிக்காதே! இப்போது செய்த பாபத்தை எல்லாம் தொலைத்து அதற்குப் பரிகாரத்தைத் தேடிக் கடவுளை பஜித்து உன் காலத்தைக் கடத்தி இறுதியிலேனும் நன்மார்க்கத்திற்கு வழி தேடிக்கொள். இனி இந்த தனித்த வாசத்தின் மகிமை போதும். அதனுடைய பலன்களை வேண்டிய மட்டும் அடைந்தாயிற்று. ப்ரயாணத்திற்குத் தயாராகப் புறப்படு." என்று சரமாரியாகப் பேசிப் பின் அவ்விடத்தில் தங்க முடியாமல் அவமானத்தினுல் வேறு விடுதியில் சென்று படுத்து விட்டார்.

சந்திரகாஸனும், முதலியாரும் எழுந்து செல்லாது அவ்விடத்திலேயே வீற்றிருந்தார்கள். இராதாபாய் அவர்களைப் பின்னும் நோக்கி "என்னுடைய துர்க்குணத்தினுல் நான் பலவிதத்திலும் பாழாய்விட்டேன். இவ்விஷயத்தை தயவு செய்து பேப்பரில் போட வேண்டாம். அது விஷயத்தில் எனக்குத் தாங்கள் உபகாரம் செய்தால் போதும்." என்று வேண்டிக்கொண்டு கண்ணீர் விட்டுப் புலம்பினுள். அவள் விஷயத்தில் அத்தகைய கன் மனமுடைய சந்திரகாஸனின் மனத்திலும் அவளுடைய புலம்பல் ஒரு சிறிது இரக்கத்தையுண்டாக்கி விட்டது. அதை அவன் வெளியில் காட்டிக்கொள்ளாமல் உள்ளடக்கியபடியே பழையமாதிரியான ஆத்திரத்தை யடைந்து பேசத் தொடங்கி, "ஓகோ! உன்னுடைய இரகஸியத்தை நான் இன்னும் மூடிவைக்க வேண்டுமா! என்னை நீ செய்த மரியாதைக்கு அதுதான் பாக்கி யுள்ளதோ! உன்னுல் நான் அடைந்த அவமானத்திற்கு உன் மீது நான் மானநஷ்ட வழக்குத் தொடுக்கலாமென்று எண்ணுகிறேன். இனி உன் வேலைக்காரர்கள் கூட உனக்கு வசமில்லை. அவர்களை வைத்துக் கொண்டே உன் மீது நான் வழக்குத் தொடுக்கப்போகிறேன். 10000 ரூபாயிக்கு நான் மானநஷ்ட வழக்கு தொடரப்போகிறேன்" என்று வெகு முடுக்காகக் கூறினுன்.

இந்த வார்த்தையைக் கேட்ட இராதாபாயின் தேகமே தீப் பிடித்ததுபோலாய் விட்டது. "ஐயோ! இவ்வளவு தூரம் வேலை

செய்த மனிதன் அதையும் செய்தாலும் செய்வான்." என்கிற நம்பிக்கை உண்டாய் விட்டது; துடித்த வண்ணமாக அவள் எழுந்து மீண்டும் சந்திரகாஸனின் காலில் விழுந்து "நானும் என்னுடைய சகலமான சொத்துக்களும் யாவும் உங்களுக்கு அடிமையாக விருக்க முன்னரே கடவுள் செய்திருந்தும் அந்த மகிமையை பாவி நானே குலைத்துக் கொண்டேன். ஐயோ! என்னை இந்த வகையில் அவமானமுறச் செய்ததெல்லாம் போதும். என்னை நீதித்தலத்திற்கும் இழுத்து என்னுடைய பகிஷை பின்னும் வாங்கவேண்டாம். தாங்கள் மான நஷ்ட வழக்குத் தொடுக்கப்போகும் தொகையை இப்போதே நான் நேரில் கொடுத்துவிடுகிறேன். என்னை இவ்வொரு விஷயத்தில் காப்பாற்ற வேண்டும்." என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று 20000 ரூபாயிக்கு ஒரு செக்கு எழுதிக் கொண்டு வந்து கையொப்பமிட்டு அதைச் சந்திரகாஸனிடம் கொடுத்துப் பின்னும் காலில் விழுந்து வணங்கி, "என்னுடைய பாப கரத்தினால் தாங்கள் பெற்றுக் கொள்ளவும் கூசுகின்றீர்கள். இதோ இருபதாயிரம் ரூபாயிக்கு செக்கு எழுதி யிருக்கிறேன். இதைப் பெற்றுக் கொண்டு என்னை இம்மட்டுடன் விட்டுவிட வேண்டும்." என்று மன்றாடினாள்.

சந்திரகாஸன் அந்தச் செக்கைப் பெற்றுக் கொண்டு அவளை நோக்கி, "உன்னுடைய வேண்டுகோளுக்காக நான் இச்சமயம் உன்னை விடுவதாக எண்ணாதே! அன்றி பணத்தைக் கண்டு விட்டதாகவும் நினைக்காதே! இதில் முக்யமான சில விஷயங்களை உத்தேசித்து இத்தறி பேசாதிருக்கின்றேன். நீ இனி இவ்வூரிலேயே இருக்கக்கூடாது. இப்போதே ஊரை விட்டு ஓடி விடு. நீ இது காறும் விவாகமாகாத கன்னிகை என்று விளம்பரம் செய்தது போலவே இனியும் செய்துகொண்டிரு. என்னுடைய பெயரை இழுத்து என் மனைவி என்பதாகக் கூறிக்கொண்டு அலைவதை நான் செவியுற்றால் அக்கணமே உன் கதி யாதாகும் என்பதை நானே கூற முடியாது; ஜாக்கிரதை. உனக்கும், எனக்கும் ஒருவிதமான சம்மந்தமும் இல்லை. என் பெயர் வெளிவருமாயின் உன் கதி அதோகதிதான். நீ செய்துள்ள பாபக்ருத்யங்கள் உன்னுடைய

பணங்களை ஏழைகளுக்கு தானம் செய்த வழியிலாகிலும் சிறிது விலகட்டும். இதுவும் உனக்கு நன்மையே ஆகின்றது. நான் மகா பாபியாகிய, லோபியாகிய—என்னை வஞ்சித்த த்ரோகியாகிய—உன்னுடைய பணத்தில் ஒத்தை கல்லி கூட என்னுடைய உபயோகத்திற்கு எடுத்துக்கொள்வேன் என்று நினைக்காதே! "விட்டதடா உன்னுசை விளாங்காய் ஓட்டுடன்" என்ற ஓர் பழமொழி யுண்டு. அதுபோலாய்விட்டது உனக்கும், எனக்கும் உள்ள பாந்தவ்யம். நீ நன்ருகப் படித்து மகா உன்னதமாக விளங்கப்போகிருய் என்று நான் மனப்பால் குடித்து சந்தோஷமாயிருந்த காலமெல்லாம் வெறும்புரட்டாகிவிட்டதுடன் என்னை நீ செய்த அவமானமானது என்னுயிர் நீங்கினுலும் மறக்க முடியாத விதமாய் விட்டது. கடவுள் அதற்கு ப்ரதி உன்னிடம் பழி தீர்க்கச் செய்துவிட்டதற்கு மிக்க சந்தோஷமடைகின்றேன். என்னுடைய பங்கில் கடவுள் ஒன்றும் குறை புரியமாட்டார். முதலியாரே! எழுந்திரும்; போகலாமல்லவா!" என்ருன்.

இது கேட்ட முதலியார் ராதாபாயை நோக்கி, "அடி, குடிகேடி! நான் உனக்கு முதல் முதல் செய்தளித்த வைர நெக்லேஸை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லையேல் உன்னுடைய மர்மங்களை நான் இன்றே பேப்பரில் விளம்பரம் செய்து விடுவேன். உம். எங்கே எடு." என்று வெகு அட்டகாஸத்துடன் கேட்டார். இது கேட்ட இராதாபாய் மறுபேச்சின்றி கண்ணில் நீர் ததும்பியவாறு எழுந்து சென்று அந்த வைர ஹாரத்தைக் கொண்டு வைத்தாள். அதை முதலியார் எடுத்துக் கொண்டதும் பதில் பேசாது சந்திரகாஸனுடன் வீடு திரும்பினுர். சந்திரகாஸனும் முதலியாரை அழைத்துக் கொண்டு கிளம்பி முதலியாரின் வீட்டிற்கே வந்து சேர்ந்தான்.

சந்தி:—முதலியாரே! இந்த வைர மாலையானது எமனுலகம் சென்ற உயிர் திரும்பியது போல உமது கைக்குக் கிடைத்தது. ஆகையால் இதை நீர் என்ன செய்வதாக உத்தேசம்?

முதலி:—அன்பரே! தாங்கள் எந்தவிதம் செய்யச் சொல்கிறீர்களோ, அந்தவிதம் செய்யத் தயாராக விருக்கிறேன். இனிமேல்

எனது குடும்ப இராஜ்யத்திற்கு நீங்கள் தான் மந்திரி, என்று நான் நிச்சயித்துவிட்டேன். இனி எக்காரியமும் உங்கள் சொல்படிக்கே நடக்கும். உங்களிஷ்டம் எப்படியோ! அதைத் தெரிவிக்கலாம்.

சந்தி:—முதலியாரே! உம்முடைய மனது இப்போதடைந்துள்ள திருத்தத்திலிருந்து மாறுபடாது வைரம் போல இருக்கும் என்ற உறுதியை நீர் உமது மனைவிக்குக் காட்டுவது போல இந்த வைர மாலையை உமது மனைவியின் கழுத்திலிட்டு மகிழ்ச்சி யடையும். அதைத் தான் நான் கூறுவேன். அந்தம்மாள் இதுபரியந்தம் சிறைவாசம் போல விருந்து சிறுமைப் பட்டதெல்லாம் போதும்;இனியேனும் சந்தோஷகரமான வாழ்க்கை நடத்தும். நேரமாய் விட்டது; இனி நான் சென்று வருகிறேன். என்னுடைய நாடகம் ஒரு வழியாக முடிவுபெற்றதாயிற்று.—என்று கூறிக்கொண்டே எழுந்து முதலியாரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வீடு சேர்ந்தான்.

அவனுடைய மனம் படும் கவலையைக் கூறவேண்டுமா| எண்ணுதலும் எண்ணுகின்றது. ராதாபாயின் கதி முடிந்ததை எண்ணி வருத்தமே கொண்டான். தற்சமயம் தனது நண்பன் சாருஹாஸனை எண்ணி சற்று விசனித்தான். பின்னும் அன்று நடந்த விஷயங்களை எல்லாம் விவரமாக வரைந்து விடுத்தான். இரவு முற்றும் ஒரே குழப்பமும் கலவரமும் கொண்டு துடித்தான். அந்த இருபதினாயிரம் ரூபாயை என்ன செய்வதென்று யோசித்தான். தினந்தோறும் 10 ஏழைகளுக்கு அன்ன மளிக்கக் கூடிய தரும கைங்கரியம் செய்வதென்று தீர்மானித்தான்.

மறுதினம் காலையில் தன் வேலைகளை முடித்துக்கொண்டு அந்த செக்கை மாற்றிக்கொண்டு வந்தான். இருபதினாயிரத்தில் 5 ஆயிரம் ரூபாய் மகாத்மா காந்தியின் கதராலயத்திற்கு நன்கொடையாக அனுப்பிவிட்டு மிகுதியுள்ள 15 ஆயிரத்தைக் கொண்டு மூல தனமாக வைத்து அதற்கோர் சிறிய விடுதி யமைத்து அதில் வேண்டிய சகலமான ஏற்பாடுகளும் செய்து "ராதாக்ருஷ்ண அன்ன சத்திரம்" என்ற பெயரமைத்து தினம் 10 ஏழைகளுக்குச் சாப்பாடு போடும்படியாக ஏற்பாடு செய்து இன்னும் சில தனவந்தராகிய

செட்டிமார்களைப் பிடித்து பின்னும் சிறிது பொருள் சேகரித்து அந்த சத்திரத்தை ஸ்தாபனம் செய்துவிட்டுப் பிறகு தான் அங்கு அவ்வூரிலிருக்க ப்ரியப்படாது வெளியூர் சென்றுவிட்டான். சில திவ்யதேசங்களில் ச்வாமி தரிசனம் செய்துகொண்டே சென்று மகாத்மா காந்தியின் சபர்மதி ஆச்ரமத்தை அடைந்தான்.

அந்த ஆச்ரமத்தின் வைபவத்தைக் கண்டு தன் மனக் கவலையை ஆற்றிக்கொண்டு அந்த கோலாகலத்தில் தானும் கலந்து கொண்டு தினந்தோறும் சர்க்கா சுற்றுவதிலும், மகாத்மாவின் உபதேசங்களைக் கேட்டு மகிழ்வதிலும் காலம் செல்வதே தெரியாமல் ஒருவருட காலத்தை அவ்விடத்திலேயே கடத்திவிட்டான். தன்னுடைய சொந்த ஜோலிகள் சகலத்தையும் மறந்தான். தனது நண்பன் சாருகாஸனுக்கு மட்டும் அவ்வப்போது கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். சதாசிவ முதலியாரின் மூலம் ஜெயமணியின் செய்தியை அறிந்து அதை சாருகாஸனுக்குத் தெரிவித்து வந்தான்.

சந்திரகாஸனுடைய மனிதர்கள் அவனைத் தம்மூருக்கு வரும் படியாகப் பல தரம் அழைத்தும் தடுத்துவிட்டான். சபர்மதி ஆசிரமத்திலேயே தன் காலத்தைக் கடத்தத் தீர்மானித்தான். ஒரு வருடம் சென்றதும் சந்திரகாஸனுக்கு "உன் தாயாருக்கு உடம்பு அதிகம்; உடனே வரவும்" என்ற தந்தி வந்தது. அதற்குமேல் சந்திரகாஸன் அவ்விடத்தை விட்டுக் கிளம்பி தனது பழய வாஸஸ்தானத்திற்கு வந்தான். அவ்வாறு வந்த சமயந்தான் ஜெயமணியின் கலியாணத்தை யறிந்து உடனே சாருகாஸனுக்கு அதைத் தெரிவித்துவிட்டு, அவன் தன் தாயார் இருக்கும் ஊருக்குப் போய்விட்டான்.

அவன் தாயாரும் மகனைக் கண்டு பேரானந்தங் கொண்டாள். அவ்வானந்தம் அவ்வாறே நிலைத்திருக்காமல் சில தினங்களில் மறைந்து விட்டதுபோல அந்தம்மாள் விண்ணுலகம் ஏகினாள். தாயின் மரணத்தாலுண்டாகிய விசனத்தைத் தாங்காது தனயன் துடித்தான். தான் படித்த படிப்பை விணாக்காது வக்கீல் துறையில் வேலை செய்து அந்த வருமானத்தையும் ஏழைகளுக்கும், கதர்

நிலயத்திற்குமே கொடுக்கவேண்டும் என்கிற நோக்கத்துடன் அவ்வூரை விட்டு வேறு ஊருக்குச் சென்று ஓர் ப்ரபலமான வக்கீலின் கீழ் பழகத் தொடங்கினுன். சந்திரகாலன் மகா புத்தி சாலியாகையால் வெகு சீக்கிரத்திலேயே தேர்ச்சி யடைந்து கொண்டே வந்தான்.

அவ்வாறு வ்ருத்தியாகி ஒரு வருடத்திற் கெல்லாம் தானே சிறிய கேஸ்களைத் தனித்து வாதிக்கவும், ஜெயம் பெறவும் தொடங்கினுன். அவனுடைய வக்கீலுக்கு இவனிடத்தில் அத்யந்த பிரியம் உண்டாய்விட்டது. வக்கீல் சந்திரகாலன், என்கிற பெயர் சிறுகச் சிறுக ப்ரகாசிக்கத் தொடங்கியது. சந்திரகாலனுக்குப் பல இடங்களிலிருந்து பெண் கொடுப்பதாக போட்டிமேல் போட்டி யாக வரன்கள் வந்தன. சந்திரகாலனை மணம் புரிந்துகொள்ளும் படியாக அவனுடைய வக்கீல் பல முறைகளில் வற்புறுத்தியும் அவன் மறுத்துவிட்டான். இவ்வித மிருக்கும் நாளில் ஒருநாள் சந்திரகாலன், வீதியில் சென்றுகொண்டே இருக்கையில் அங்கு சென்ற ஒரு உருவத்தைக் கண்டு அப்படியே அசைவற்று இமை கொட்டாது பார்த்தபடியே தம்பித்து நின்றுவிட்டான்.

13-வது அதிகாரம்.

சாகர அலைக்கு ஓய்வுதானுண்டோ?

நாடகக் கொட்டைகையில் சென்று உட்கார்ந்த ஜெயமணியும், கங்காதரனும் ஒருவரோ டொருவர் பேசாமல் மவுனமாகவே இருந்தார்கள். குறித்த நேரத்தில் திரை திறக்கப்பட்டது. நாடகத்தை வெகு திறமை யாக நடிக்கத் தொடங்கினுர்கள். சங்கீதம் அதி யத்புத மாக இருந்தது. ஜனங்களின் கர கோஷத்தினுல் செவி செவிடு படு கின்றது. கதையின் சாரமோ ஒருவனைக் காதலித்தும் கலியாண

மாகாமல் அவந்தரையாக முடிவு பெறும்படியாக விருக்கின்றது. இந்த கதையைப் பார்க்க ஜெயமணிக்கு அங்கு உட்கார்ந் திருப்பதற்கே சம்மத மில்லாது தவிக்கின்றாள். மனச் சாந்தியின் பொருட்டு வந்த விடத்திலும் இத்தகைய கோர காக்ஷியைக் காண நேர்ந்ததே! ஐயோ! என் சரிதையை நானே அனுபவிப்பது போதா மல் நாடகத்திலும் நானே பார்த்துப் பரிதபிக்க வேண்டுமா! என்று மனங் கலங்கி தவித்தவாறு நடு மத்தியில் தன் புருஷனுடன் எழுந்து வீடு வந்துவிட்டாள். அவள் மனவேதனையுடன் நாடக வேதனையும் சேர்ந்தது. அன்று பூராவும் போஜனமே கொள்ள வில்லை; புலம்பியபடியே காலத்தை யோட்டினாள்.

சாருகாஸன் இவர்களுடைய புகைப் படம் கேட்டிருந்தபடியே கங்காதரர் அதை சாருகாஸனுக்கு கடிதத்துடன் அனுப்பினார்.

இது இங்ஙன மிருக்க, சாருகாஸன் சந்திரகாஸனைக் கண்டதும் ஆநந்த வெள்ளத்தில் மிதந்து அவனைத் தழுவிக்கொண்டு "அப்பா! சந்திரகாஸா! உன்னைப் பார்த்துக் களிக்கும்படியான பாக்யம் கிடைத்ததை எண்ணி மிகவும் சந்தோஷ மடைகின்றேன். உன்னை அப்பாதகி ராதாபாய் அவமானம் செய்ததாக எழுதி யிருந்ததைப் படித்ததும் என்னுள்ளம் எப்படி பதறியது தெரியுமா! அந்த படவா ராஸ்கலை ஒரே குத்தாகக் குத்திவிடலாமா என்ற ஆத்திரம் பொங்கியது. அவ்வாத்திரத்தின்படியே நீ அவளைப் பழிக்குப் பழி தீர்த்துவிட்டதுதான் சந்தோஷமாயிற்று. அந்தக் கழுதை இப்போது எங்கிருக்கிறது?" என்று விசாரித்தான்.

சந்திர:—அன்பான நண்பா! அதைக்கூறவும் வேண்டுமோ! அப் பொழுதே அவளுடைய அப்பன் வந்து அவளை இழுத்துக்கொண்டு போய்விட்டான். அதற்குப் பின்னர் அதன் செய்தியே எனக்குத் தெரியாது. கேவலம் துர்ஜனப்பிடையாகிய அதை நாம் நினைத்தாலும் கொடிய பாதகமாகும். அந்தப்பேச்சை விட்டுவிடு. உன்னுடைய சமாச்சாரங்கள் எப்படி இருக்கின்றன. ஜெயமணி சவுக்யமா! ஆ! நண்பா! இன்னொரு அதிசயங் கேட்டாயா! ஜெயமணியின் புருஷ ராகிய கங்காதரருடைய தம்பியின் மகளாகவேண்டுமோம் ராதாபாய்.

இந்த ரகஸியத்தை எழுத மறந்துவிட்டேன். ஜெயமணிக்கும் உறவு. அவள் புருஷனுக்கும் உறவாம். சனியன் உலகத்தவரைப் போல நேர்மையாக அவளும் இருந்து உனக்கும் உன் காதலிக்கும் விவாகம் ஆகியிருந்தால் நாம் எத்தனை மேன்மையாயும் சந்தோஷ மாயும் இருக்கலாம். நம்முடைய வினையின்படி எல்லாம் சின்னமாய் விட்டன.

சாரு:—நண்பா! சென்ற கதையை சிந்தித்திடில் பயனுண்டோ! நான் மகா அதிர்ஷ்டஹீனன். என்னுடைய துரதிர்ஷ்டத்திற்கு ஒப்பாகத்தான் யாவும் நடக்கும்; நடக்கின்றது; நடந்துவிட்டது. இனியும் நடக்கப்போகின்றது. நண்பா! ஆனல் நான் சிறிதும் எதிர் பாராதவிதம் ஒரு சிறிது அதிர்ஷ்டமிருந்ததுபோல என் கண்மணி யைக் கண்ணால் கண்டு களிக்கும் பாக்யம் கிடைத்தது. நான் ஒரு நண்பனின் விவாகத்திற்குக் கல்கத்தாவுக்குச் சென்றிருந்தேன். அப்போது ஜெயமணியின் வீட்டிற்குச் சென்றேன். ஆகா! அவ ளுடைய உபசாரங்களிருக்கட்டும். அவள் புருஷர் என்மீது காட்டிய அன்பும் ஆதரவும் இனி யாரும் காட்டமாட்டார்கள். தன் மனை வியை இச்சித்த மாபாவி நான் என்று எண்ணி என்னை வெறுத்து என் மீது பொறாமை கொள்ளாது அவர் என்னை தனது சொந்தமனிதன் போல எண்ணி என்னை நடத்திய முறையை சொல்லச் சாத்யமே இல்லை. என் ஜெயமணியின் தன்மையைக் கூறவேண்டுமா! அவள் ஒரு துரும்புபோல இளைத்துவிட்டாள். சதா இருவிழிகளும் நீர் பொழிந்தவாறிருக்கின்றன. அவளுடைய விசனகரமான கண்ராவி யைக் கண்டு சகிக்கக்கூடவில்லை. ஒரு நாள் தங்கி வந்துவிட்டேன். என்னிலைமை கேவலம் பித்தன்போ லாய்விட்டது. வரம்பு மீறி விடும்போலான நிலைமைக்கு வந்துவிட்டேன். ஆதலால் சொல்லிக் கொள்ளாது ஒரு கடிதமெழுதி வைத்துவிட்டு வந்துவிட்டேன். உம். மற்ற விதிதான் தெரிந்திருக்கின்றதே! அதைக் கூறவும்வேண்டுமா! அதுதான் அப்படி என்றால், இன்னொரு புதிய வெள்ளம் ஒன்று வந்திருக்கின்றதே! இதை என்னென்பேன்? நான் வேலையாயுள்ள ஆஸ்பத்ரியில் பத்மலோசனு என்கிற மின்னாள் ஒருத்தி லேடி டாக்ட ராக இருக்கிறாள். அவளுடைய அழகும், சாமர்த்தியமும் சொல்

லத்தரமன்று. இருப்பினும் என் மணிக்கு நிகர் மற்றொரு மாமணி ஆவளா! அந்த பேதை என்மீது கடுமையான ப்ரியம் வைத்துக் காதல்கொண்டு தவிப்பதாயும், தன்னை மணக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினாள். அதற்கு நான் மறுத்துவிட்டு வந்துவிட்டேன். அதே ஏக்கத்தினால் அந்த மாது ஜ்வரநோய் கண்டு படுத்திருக்கின்றாளாம். இதென்ன கர்மமப்பா! இவைகளை எல்லாம் என்னால் கண்டு சகிக்கக் கூடவில்லை. என் வினையை எண்ணி வருந்திக்கொண்டிருக்கும் எனக்கு இத்தகைய புதிதான தர்ம சங்கடங்கள் ஏன் லபிக்க வேண்டும்?

சந்தி:—நண்பா! நான் சொல்வதற்குக் கோபிக்காதே! ஜெபமணிதான் உன் கைத்தவறிவிட்டாள். இனி அவளை எண்ணியே நீ உன் காலத்தை வீணாக்குவது ஒரு சிறிதும் ஒவ்வாது. ஏதோ, அவளுக்கும் உனக்கும் இம்மட்டும்தான் ப்ராப்தம் என்பதை எண்ணி மனந்தேறவேண்டாமா! அவளை எண்ணி இனி பயன் உண்டா! நீ உன் வாழ்நாள் முற்றும் வீண் நாளாகக் கழிக்க எண்ணுவது நலமாகுமா! எடுத்த ஜென்மம் வருத்தமாகவே முடியவிட்டுவிட்டால் சந்தோஷமடைந்து சுகப்படும் நாள் உண்டா! நண்பா! உன் காலத்திற்குப் பிறகு உன்னுடைய பெயர் விளங்கவேண்டாமா! உன் குலம் க்ஷீணித்துவிடுதல் நன்றா! செழித்து ஓங்கவேண்டாமா! உன்னையே வலுவில் காதலித்துள்ள அக்கன்னிகையையே நீ மணப்பதில் உனக்கென்ன ஆக்ஷேபனை? அதோடு உனது தொழில் முறைக்கும் ஒற்றார்போல அந்த மாது சிரோன்மணியும் லேடிடாக்டர் என்றும் கூறுகின்றாய்! ஆகையால் அவளையே மணந்துகொள்வாய்! என் அன்பான சாருகாஸா! 'எனக்குத் தெரியாமல் நீ கூறவந்துவிட்டாயா!' என்றும், 'நீ எனக்கு உண்மை நண்பனாக இருந்தும் இவ்விதம் கூறுகிறாயே!' என்றும் நீ எண்ணலாம். எதற்கும் ஒரு வரம்பு இல்லையா! நீ காதலித்த பொருள் கைவிட்டு விலகிய பின்னர் அதையே நினைப்பது பயனற்றதல்லவா! ஆகையால் தெரிவித்தேன். என்ன சொல்கிறாய்?

சாருகாஸன்:—நண்பா! நீயும் நானும் நண்பர்களென்ற பதத்தின் மட்டுடன் இல்லாது உயிரும் உயிரும் ஒன்றாக நட்பு கொண்ட

வர்கள். என்னுடைய நிலைமை முற்றும் உனக்கு நன்ருகத் தெரிந்த விஷயமே! என்னுடைய இதயக் கோட்டையில் குடி புகுந்த என் கண்மணியை நான் மறப்பதும் அவ்விடத்தில் இன்னொருத்தியை ஏற்பதும் எங்கேனும் நடக்கக் கூடியதா! ஐயோ! என்னை அந்த மாது எவ்வளவு மேன்மையாக காதலித்திருந்த போதிலும் என் மனம் அந்தப் பாவையின் மீது பாயவில்லையே! நான் என்செய்வேன்? இனிமேல் எனக்கு சுகமும், க்ஷேமமும், குடும்ப வ்ருத்தியும் மறுமையிலேயே யன்றி இம்மையில் சிறிது மில்லை என்பதே என்னுடைய தீர்மானம். அதைப் பற்றி வீணுக ஏன் வார்த்தை வளர்க்கவேண்டும். அம்மட்டுடன் அதை விட்டுவிடுவதே நலம். எல்லாம் பூர்வ ஜன்ம பலன். இவைகளைப் பற்றி இனிமேல் பேசுவதற்கே எனக்குப் பிடிக்கவில்லை. ஆயுள் காலம் பரியந்தம் வாழ்க்கை இன்பத்தைக் கருதி நலனைச் செய்யாது,நாசமுறச் செய்து விட்ட என் பெற்ருேரின் கண் முன்னுல் இவ்விதம் தான் இருந்து என் காலத்தைக் கடத்தவேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.

சந்தி:—சாருகாஸா! நீ மதியீனனன்று, நாஸ்திகனன்று, உனக்குக் கடவுளிடத்தில் அத்யந்த பக்தியும், அபாரமான நம்பிக்கையும் உண்டு என்பதை மறந்தனையா! விவாகமாவதும் குழந்தை பிறப்பதும் யாவும் அவனருள் என்பதை நினையாது மனிதர்களின் தடங்கல்களினுல் நின்றுவிட்டதாக நினைப்பது கூடுமா? அதை நான் சொல்லவேண்டுமா! உன்னுடைய ஊழ்வினையின்படியே யாவும் நடந்துவிட்டதே யன்றி வேறு ஒன்றும் இல்லை. இனி அதைப் பற்றிக் கூறுவது மடமையாகும். நண்பா! நான் இங்கு வரும் முன்பு உன் பெற்ருேரைக் கண்டேன். அவர்களுடைய பரிதாபத்தைக் கூறவேண்டுமா! அவர்கள் கண்ணீர் விடுவது கொஞ்சமன்று. மனந் தவிக்கின்ருர்கள். உனக்கு எப்படியாவது விவாகத்தைச் செய்துப் பார்க்கவேண்டு மென்று துடிக்கின்ருர்கள். அவர்களுடைய கோரமான கண்ராவியைக் காண முடியவில்லை. அவர்களை நீ நேரில் கண்டால் உன் வைராக்யத்தை ஒழித்து விடுவாய். உன்னுடைய பெற்ருேர்களை நீ இப்போது அடையாளமே கண்டுகொள்ள மாட்டாய்; அவ்வளவு துரும்பாக இளைத்துவிட்டார்கள். இவ்விதம்

வீண் வாதம் செய்யாதே! பெற்றோர்களைக் களிப்பிக்கும் பொருட்டு நீ உன் சபதத்தை மாற்றிக்கொள். என்மீது விரோதங் கொள்ளதே. அவர்கள் சொல்லச் சொல்லியபடியே நான் சொன்னேன்.

சாருகா:—நண்பா! வருத்தங் கொள்ளாதே! தற்போது நான் அவ்விஷயங்களைப் பற்றிப் பேசவே மனங் கொள்ளவில்லை. அதை விட்டுவிடு. நீ சொல்லியதுபோல என் விதிப்படி என் முடிவு இது தான் என்று நான் தீர்மானித்துவிட்டேன். சரி நீ எழுந்துவா! போஜனத்தை முடித்துக்கொண்டு வருவோம்—என்று கூறிக் கொண்டே எழுந்துவிட்டான். அதற்குமேலும் சந்திரகாஸன் அதிகமாகப் பேசுவது கூடாதென்று எண்ணி சாருகாஸனுடன் போஜனத்திற்குச் சென்று இருவரும் புசித்துவிட்டு மீண்டும் வந்து உட்கார்ந்தார்கள்.

சாருகாஸன்:—நண்பா! என்னை விவாகம் செய்துகொள்ளும் படியாக நீ வற்புறுத்துகின்றாய். நான் அந்தக் கேள்வியைத் திருப்பிக் கேட்கவேண்டாமா! நானாகிலும் மனத்தை ஓரிடத்தில் கொள்ளை கொடுத்துவிட்டுக் கலங்குபவன். பிறரின் தூண்டுதலுக்காக விவாகம் செய்துகொண்டால் யாது உபயோகம். அதனால் சுகமே இல்லை. எனக்கும் கஷ்டம். என்னை மணந்த நங்கைக்கும் கஷ்டம். உண்மையான அன்பின்றி எவ்விதம் வாழக்கூடும்? உலகத்திற்காகப் பால் குடிப்பதா! உடல் நலத்திற்காகப் பால் குடிப்பதா! மனமொத்த காதல் இல்லாத தம்பதிகளின் வாழ்வு புண்ணிலும் கொடியதுதான். வீணாக ஓர் பெண்ணைக் கொடுத்து வதை செய்வதற்கொப்பாக மணம் செய்து என் வருத்த வேண்டும்? இதற்கு நிதர்சனம் ஜெயமணியைப் பார்த்தால் போதாதா! அவளுக்காவது அவள் புருஷருக்காவது நிம்மதியான மனச் சந்துஷ்டி எப்போதேனும் உண்டா! இம்மியளவும் இல்லை. என் விதி இவ்விதமிருக்க அதைப்பற்றி வீணாகப்பேசுவதில் பயன் யாது? உன்விஷயத்தில் என் போன்ற சங்கடங்கள் ஒன்றுமில்லை. எத்தனையோ பெயர்களுக்கு விவாகமானதும் முதல் தாரம் இறப்பது உண்டு; அதுபோல உனக்கும் தாரம் நீறாகி விட்டதாக எண்ணி வேறு மணம் செய்து

கொண்டு வாழத் தடை என்ன? நண்பா! இதற்குச் சரியான பதில் எனக்குக் கொடு.

சந்திர:—சாருகாலா! இக்கேள்வியை நீ கேட்பாய் என்பது எனக்கு முதலிலேயே தெரியும். இக் கேள்வியை நீ கேட்பதும் கடமை தான். எனக்கு உன் போன்ற துன்ப மில்லை யாயினும் நான் பட்டுள்ள கஷ்டமும் அவமானமும் என் வாழ்க்கையில் முற்றும் வெறுப்புண்டாகும்படியாகச் செய்துவிட்டன. அதனாலேயே நான் இவ்விஷயத்தில் ப்ரவேசிக்காமலிருந்துவிட்டேன். இத்தகைய மானபங்கமான விவாகம் எனக்கு நடக்காமலேயே இருந்தால் நான் எத்தகைய சந்தோஷமாக இருந்திருப்பேன்? என்னுடைய செய்தி பிறருக்குத் தெரியாதிருக்கும் பரியந்தம் சந்தோஷந்தான்; தெரிந்து விடுமாயின் "உனது பாரியையா இத்தகைய கொடிய துன்மார்க்கி யாக விருந்தாள்?" என்கிற சொல்லை பிறர் சொல்லக் கேட்கும் போது என்னுடைய நிலைமை எவ்வித மிருக்கும்? என்னுடைய இந்த ஒரு கஷ்டந்தான் என்னை வருத்துகின்றது. அதோடு நாம் இருவரும் உயிரும் உடலுமாக விருக்கையில் நீ இவ்விதம் விவாக மின்றித் தவிப்பதும் நான் சந்தோஷமாக விருப்பதும் என் மனம் சம்மதிக்கவில்லை. இவ்விரண்டையும் உத்தேசித்தே நான் இத்தனை நாட்களாக என் காலத்தைக் கடத்தி வந்தேன். இதிலும் ஓர் புதிய சம்பவம் நடந்தது. அதையும் கூறுகின்றேன் கேள். சில மாதங்களுக்கு முன்னுல் ஒரு நாள் நான் மாலைப் பொழுதில் வீதி வழியே உலாவிக்கொண்டு வருகையில் ஒரு அழகிய உருவத்தைக் கண்டேன்; அப்படியே அசைவற்று நின்றுவிட்டேன். ஆகா! அவ்வுருவமானது சாதாரணமான மானிட உருவமென்று நான் நம்ப வில்லை. தேவ உரு வென்றே திண்ணமாக எண்ணினேன். என்னுடைய பார்வையில் அவ் வுருவம் பதிந்தது. அந்த உருவமாவது ரம்பை, ஊர்வசி போன்று விளங்கிற்று. அம்மின்னிடையாளை நான் கண்டதும் என்னிலைமை திடீரென்று மாறுதலை யடைந்தது. அவள் தன்னுடைய அழகிய கரத்தில் ஓர் வெள்ளித் தட்டில் புஷ்பம். பழம் முதலிய பூஜாத்ரவ்யங்களைத் தாங்கிக் கொண்டு குனிந்த தலை நிமிராது கோயிலுக்குச் சென்றுள். அவ

ளுடன் கூட ஒரு மூதாட்டியும், சிறு பெண்ணொருத்தியும் சென்றார்கள்.

அந்தப் பெண்ணின் ரூபலாவண்யத்திற்கு ஏற்றவாறு அலங்காரங்களும் அமைந்திருந்தன. அவளுடைய நடையைக் கண்ட பெண் பாம்பை வெட்கியோடுமென்றே கூறலாம். சாருகாஸா! அதிகம் கூறுவானேன்? அந்தப் பெண்ணைக் கண்டவுடன் என்னுடைய உடல், பொருள், ஆவி யாவும் அவள் பால் தாமாகச் சென்றுவிட்டன. அந்த மாதரசி என்னவோ தலை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. அவள் கோயிலுக்குச் சென்றாள்; நானும் அவள் பின்னோடு கோயிலுக்குச் சென்றேன். அம்மடந்தையுடன் கூடவந்த மூதாட்டி அம்மடந்தையை நோக்கி "ப்ரேமாபாய்! அந்தப் பக்கத்தில் கும்பல் அதிகமாகவிருக்கிறது. அவ் வழியே செல்லாதே!" என்றாள். அப்போதே அம்மடந்தையின் பெயரையும் தெரிந்துகொண்டேன். அவர்கள் ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு வீடு சென்றார்கள். அவர்கள் வீடு எங்கிருக்கின்றதென்பதை அறியும் பொருட்டு கூடச் சென்று இடத்தைத் தெரிந்துகொண்டேன். அவர்களின் வீட்டு வாசலில் ஒரு அழகிய பித்தளைத் தகட்டில்

டாக்டர் சோமநாதன் M. D

என்ற எழுத்துக்கள் காணப்பட்டன." என்று சந்திரகாஸன் சொல்லிக்கொண்டே வருகையில் சாருகாஸன் இடை மறுத்து "ஓகோ! நண்பா! இனி நீ கூறுமலே நான் தெரிந்துகொள்வேன். டாக்டர் சோமநாதனும் நானும் மெடிகல் காலேஜில் படிக்கும் போதிலிருந்து மிகவும் சிநேக முள்ளவர்கள். சோமநாதனின் தங்கையே ப்ரேமாபாய் என்பவள். அவளை எனக்கு நன்றாகத் தெரியும். நான் படிக்கும்போது சோமநாதன் ப்ரேமாபாயை மணக்கும்படியாக என்னிடம் பல தரம் தெரிவித்தான். என்னுடைய காதல் முற்றும் என்னருமை ஜெயமணி

யிட மிருப்பதை அவன் அறியான். அந்தரங்க விஷயத்தை அவனிடம் இப்போதும் வெளியிடவில்லை. அவன் உண்மையை அறியாமையால் பலதாரத்தில் வற்புறுத்தினுன். நான் விவாகமே செய்துகொள்ளப் போவதில்லை என்று கூறிவிட்டேன். நண்பா! உனக்கு அம்மங்கை நல்லாளை நான் உடனே மண முடித்து விடுகிறேன். நான் ஒரு வார்த்தை சொன்னுல் அதற்கவன் தடை சொல்லாது இணங்கி விடுவான். ஆகையால் இன்றே அதற்கான ஏற்பாடு செய்கின்றேன்.

சந்தி:—கனவிலும் கருதாதவிதம் விஷயங்கள் முடிகின்றனவே! என்ன ஆச்சரியம்! M. D. சோமநாதன் உன்னுடைய சிநேகிதனு! அந்த ப்ரேமாபாய் என்பவள் சோமநாதனின் உடன்பிறந்தவளா! அந்தப்பாவையைத் தான் நீ பார்த்திருக்கிருயே! உண்மையில் அம்மாது மிக்க எழில் வாய்ந்தவளல்லவா! அவளுடைய ரூபத்திற்கே நான் அடிமையாய்விட்டேன். நண்பா! சாருகாஸா! எல்லாம் வாஸ்தவம்தான். என்னுடைய நண்பனுகிய நீ இவ்விதம் வருந்திக்கிடக்கையில் நான் விவாகம் செய்துகொண்டு வாழுவதென்றுல் அது எனக்கு யோசனையாக இருக்கின்றதே! என்ன செய்வது?

சாரு:—நண்பா! என்னை எதிர்பார்த்திருந்தால் விநாயகரின் கலியாணம்போலத்தான் ஆகும். என் விதியின்படி நான் அனுபவிக்கின்றேன்; நீ அதை எதிர் பார்ப்பது சிறிதும் சரியல்ல. கட்டாயம் நீ விவாகம் செய்துகொண்டுதான் ஆகவேண்டும். நானே உன்னைக் கட்டாயம் செய்கிறேன். இவ்விஷயங்களிலெல்லாம் அம்மாதிரி யிருப்பது கூடாது. மனத்தில் பிரியமிருக்குமானுல் அதுதான் முக்கியமானது. நான்தான் கஷ்டப்பட்டால் நீயேனும் சுகப்படலாகாதா! எனக்கு என்னைச் சார்ந்தவர்களின் சுகவாழ்க்கைதான் ப்ரதானம். ஆகையால் நீ இவ்விஷயத்தில் மறுக்காதே! நான் மனச்சந்துஷ்டியுடன் செய்யவிருக்கிறேன். நீ தடைகூருது ஒத்துக்கொள்ளவேண்டும். என் விஷயத்தில் நான் சந்தோஷமாக இவ்வித சுபகாரியங்கள் செய்ய பாக்கியமற்றிருப்பினும் உனக்கேனும் செய்து பார்க்கும் பாக்கியத்தை அடையும்படியான உதவி நீ செய்ய

வேண்டும். இதோ இன்றே சோமநாதனுக்குக் கடிதம் எழுதிவிடு கிறேன்—என்று கூறி சந்திரகாஸனைத் தேற்றி அவனுக்குப் பின் னும் பற்பல தேறுதல்களைக் கூறி அவனைச் சம்மதிக்கச்செய்துப் பின் இது விவரமாக சோமநாதனுக்கு விரிவான கடிதமெழுதி அவ னது சம்மதத்தைத் தந்தி மூலம் தெரிவிக்கும்படியாகக் கேட்டான்.

சந்திரகாஸன் இரயிலில் வந்த அலுப்பினால் படுத்து சற்றுக் கண்ணயர்ந்துவிட்டான். பிறகு சாருகாஸன் தனித்து உட்கார்ந் திருக்கையில் அன்றைய தபால்கள் யாவும் வந்தன. அன்று சாரு காஸன் ஆஸ்பத்ரிக்குச் செல்லாது லீவு போட்டுவிட்டான். ஆகை யால் சாவகாஸமாக எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே வருகை யில் கங்காதரரின் கடிதமிருக்கக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து அதை ஆவலுடன் பிரித்துப் படிக்கலானான்.

210020

"அறிவிற் சிறந்து ஆற்றலில் மிகுந்த அன்பான நண்பர் சாருகாசனுக்கு அநேக மங்களங்களுண்டாவதாக.

தற்போது எங்கள் மனம் படும்பாட்டைச் சாற்ற சாத்திய மன்று. தாங்கள் இவ்வாறு சொல்லிக்கொள்ளாமல் போய்விட்ட வருத்தத்தை என்னால் சகிக்கக்கூடவில்லை. எனினும் உம் முடைய மன நோக்கத்தையும் அறிந்தேன்; அந்த கடிதத் தைப் படித்து என் மனம் பட்ட வருத்தம் கூறவியலாது. இத் தனை வருத்தமும் தாங்களனுபவிப்பதற்குக் காரணம் பாவி நான் என்பதை பலகாலும் எண்ணி வருந்துகின்றேன். வருந்திப் பயன் யாது? எல்லாம் தலைவிதிப்படியே ஆய்விட் டது. உங்களுடன் கூட இன்னும் ஒரு மாதம் இருந்தாலும் என்னுவல் அடங்காது. எனக்கே அவ்வாறிருக்கையில் உமது ஜெயமணியின் நிலைமையைக் கேட்கவேண்டியதே இல்லை. என் னுடைய ஞாபகத்தை மறக்காமல் அடிக்கடி வரவேண்டுமாய்க் கோருகிறேன். உங்களுடைய அத்யந்தமான அன்பிற்கு நான் என்னவிதமாக எழுதுவதென்றே தெரியவில்லை. பித் தன்போல வரைந்துள்ளதை ஏற்றுக்கொள்ளவேண்டும். படத்தை நாளைய தபாலில் அனுப்புகிறேன். உங்களுடைய

ஒவ்வொரு அம்சத்தைப்பற்றியும் உங்களிடமே புகழ்ந்து கூறுவது அழகல்லவெனினும் என் மனத்திலுள்ளவற்றை அறிவிக்கின்றேன். தாங்கள் இனி சென்றதை மறந்துவிட்டு ஒரு அழகிய மாதை மணந்துகொள்ள வேண்டுகிறேன். உங்களை கேலி செய்வதாக எண்ணவேண்டாம். உண்மையான எண்ணத்தைத் தெரிவித்தேன். அடிக்கடி கடிதமெழுதக் கோருகிறேன்.

இங்ஙனம்
தங்களை மறவாத நண்பன்
கங்காதரன்.''

"எனதன்பான சாருகாஸா! இந்த முறைக்குமேல் நான் உன்னை வர்ணித்தெழுத முடியாத கொடிய பாவியாய்விட்டேன். என் ப்ராண நாதரின் உத்தரவின்பேரில் இதையேனும் வரையும் பாக்கியம் கிடைத்ததே சந்தோஷம். மிருதங்கமும், தவிலும், ஒன்றையொன்று குறை கூறிக்கொள்வதுபோல உன்னிடம் நான் தெரிவிப்பதும், என்னிடம் நீ தெரிவிப்பதுமாக இருக்கிறது. வல்லான் வகுத்த இத்தொல்லுலகில் சொல்லவறியாத கன்மத்தைச் செய்து பிறந்த பாபிகள் நாம் இருவர்தாம் என்று துணிபுடன் கூறுவேன். இறந்தவர்களை எண்ணிப் புலம்புவதும், தற்போது நாம் மறைந்தவர்களாகக் கதறுவதும் ஒன்றாய்விட்டது. உன் கடிதத்தை தினம் இரு முறை பாராயணம் செய்வதுபோற் படித்துவருகிறேன். என் கண்ணிலிருந்த தண்ணீரெல்லாம் வற்றிப்போய் கண்ணும் ஒளி மங்கிவிட ஆரம்பித்துவிட்டது. எது குறைவுபட்டாலும் ஆயுள் வ்ருத்திக்குப் பஞ்சமில்லை. நானும் இறக்கப்போவதில்லை; என்னுடைய துயரமும் நீங்கப்போவதில்லை. இந்த சங்கடமான செய்தியையே உனக்குத் தெரிவித்து உன்னைப் பின்னும் புண்படச் செய்கிறேன். உம். தேகம் முற்றும் ஒரே ரணமாகவிருக்கையில் இன்னும் புண்படச் செய்வதற்கு இடமும் பாக்கியுள்ளதா! இல்லை! இல்லை! அதைத் தெரிந்துதான் எழுதுகிறேன். சாருகாஸா! நீ உன் மன வருத்தத்தை வெண்மை

யான காகிதத்தில் கருமையான மசியிட்டுத் தீட்டிவிட்டாய். அந்த கடிதத்தையே திருப்பிப் படிக்கும் நிலையிலுள்ள நான் உனக்கு என்ன எழுதப்போகிறேன்! என்னருமை சாருகாலா! என் வாழ் நாளில் இன்னும் என்னவித மாறுதல்கள் நடக்குமோ, எப்படியாகுமோ எனக்கே ஒன்றும் தோன்றவில்லை, எத்தனை வாரங்கள், மாதங்கள், வருடங்கள், யுகங்கள்தான் நான்—நாம்—இத்தகைய துன்பத்தை அனுபவிக்கவேண்டுமோ தெரியவில்லை. அதை நினைத்தால் என்னை அறியாமல் என்னை ஏதோ வதைசெய்கின்றது. என் பாழாய்ப்போன பிறவியானது அமிருதத்தில் விஷங்கலந்ததுபோலாய்விட்டது. நான் சிந்தித்து வருந்துவதற்கு துயரங்கள் ஒன்றா இரண்டா! அவைகள் நீயுமறிந்த விஷயங்களே யாகும். இதற்கொரு முடிவும் கிடைக்குமா! என்று நான் எதிர் பார்க்கிறேன். இத்தகைய கவலைகளால் இரவு, பகல் நித்திரையின்றிப் புலம்புவதைத் தவிர வேறு வழி கிடைக்கவில்லை. என் மனத்தை நான் பல விதத்திலும் திடம் செய்துகொண்டே இருக்கிறேன். என்னைப் பற்றி நான் பெருமை சொல்வதாக நினைக்காதே! சாருகாலா! ஒருகாலத்தில் என்னைப்போல சந்தோஷத்திலும் இன்பத்திலும் ஆழ்ந்திருந்தவர்கள் ஒருவருமில்லை என்று இப்போது நினைக்கின்றேன். அதற்கு நேர்மாறாக தற்போது என்னைப் போன்ற பாவியும் துரதிர்ஷ்டஹீனையும் ஒருவருமே இருக்க மாட்டார்களென்று துணிபுடன் கூறுவேன். நான் எத்தனையோ முறையில் என் மனத்தை வைராக்கிய மார்க்கத்தில் செலுத்தி வந்தும் அந்தப் பாழும் மனம் என்னையே ஏமாற்றமடையும்படியாகச் செய்கின்றது. இன்னும் நான் என்னவென்றுதான் எழுதுவது? எழுத முயன்றால் இதுபோன்று இன்னும் எத்தனையோ விஷயங்கள் எழுத மனமும் பேனாவும் இழுத்துக் கொண்டு போகின்றன. நான் முதலில் உனக்குக் கடிதமே எழுதவேண்டாம் என்று நினைத்தேன்; பிறகு இரண்டொரு வரி எழுதலாமென எண்ணினேன்; எழுதத் துவக்கியதும் பல வரிகள் என்னையறியாது நிறைந்துவிட்டன. சாருகாலா! எனக்கு இனி ஒரே ஒரு ஆசைதான் இருக்கின்றது. அதாவது

பாபங்களிலும் தோஷங்களிலும் பல விதங்களிருக்கின்றன. அவைகளில் எந்த விதத்தினுல் நாம் பிரிக்கப்பட்டுப் பரிதபிக்கலானேம்? எப்போது இஜ் ஜன்மம் முடிவு பெற்று மறுமையில் நாம் ஒன்றுசேருவோம், என்ற விஷயங்களைப் பிரபலமான ஜோஸியர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். அதைத்தெரிந்தால் பிறகு சிறிது மனம் சமாதான மடையுமோ, என்னவோ! மற்ற விதத்தில் ஒருவிதமான முடிவுமில்லை. என்னுடைய பிறவியையும் என் விஷயத்தையும் நினைத்தால் எனக்கே வெறுப்புண்டாகின்றது. அந்த அவகேடான சமாச்சாரத்தை எழுதுவதும், முடிவு பெறுவதும் இனி சாத்யமானதேயல்ல. நம்முடைய சரிதையை நான் ஒரு தனித்த புத்தகமாக வரைந்து வெளியிடத் தீர்மானித்துவிட்டேன். அந்த ஆவலேனும் நிறைவேறும்படியாகக் கடவுள் கருணை புரிவாரோ, அதிலும் மண்ணைப் போட்டுவிடுவாரோ! தெரியவில்லை. எத்தனை முறை எழுதினும் ஒரே புலம்பல் தான் என்பது தெரிந்த விஷயமாகையால் இதோடு நிறுத்துகிறேன். அவ்வப்போது உன்னுடைய க்ஷேமத்தை எழுதவும்.

இங்ஙனம்
அபாக்யவதியான
ஜெயமணி.''

என்று வரைந்திருந்த கடிதத்தைப் படித்தான். சாருகாஸனின் கடிதத்தைப் படித்த ஜெயமணியின் கதியையே சாருகாஸனும் அடைந்தான் என்பதைக் கூறுவது மிகையாகும். கண்ணீர் பெருகியவாறு கடிதத்தை முடித்தான்; கண்களில் ஒற்றிக்கொண்டான். தனது ஆவல் மிகுந்த ஆநந்தமான முத்தமாலைகளை அக்கடிதத்திற்குச் சூட்டினன். அதையே மார்புறத் தழுவிக்கொண்டு "கடவுளே! என்னுடைய இம்மைப் பிறவியாகியப் பாவிப் பிறப்பு இம்மட்டுடன் தொலையட்டும். எனது மறுமைப் பிறவியிலாவது எனது கண்மணியான ஜெயமணியைக் கட்டி யணைக்கப் பாக்கியமளிப்பாயோ! அப்போதும் இவ்விதமான பரிபவத்திற்கே இலக்காக்கி விடுவாயோ! ஹா! என் செல்வத் தங்காய்! ஜெயமணீ! நீ எத்தனை

நுண்ணறிவுடன் எழுதியிருக்கின்றாய்! உனது பிறவியானது அமிரு தத்தில் விஷங்கலந்திருப்பது போன்று உள்ளதா! ஆகா! என்ன அருமையான வாக்கியம்! இம்மொழியை எவ்விதந்தான் பொறுக்கி எடுத்தாய்? என் கண்ணே! ஜெயமணீ! உன்னுடைய அபார மான அழகும், அபரிமிதமான அறிவும், அருமையான குணமும், அத்புதமான மாதிரியும் அமிருதத்திற்கு ஒப்பாக விளங்குவதில் அதில் பாழாய்ப் போன விதி என்னும் விஷங்கலந்திருப்பதால் அமிருதம் முற்றும் அநியாயமாகப் பாழாய்விட்டதே! இந்த ஜென் மம் என்று தொலையும்? மறு பிறவி எப்போது வரும்? உம். இவை எல்லாம் கனவில் காணவேண்டியவைதான். அடாடா! என்னவிதமான முடிவுகள் திடீரென்று வந்து விட்டன! ஜெயமணீ! உன்னுடைய கடிதத்திலுள்ள ஒவ்வொரு எழுத்தும் ஒவ் வொரு முத்து போன்றும், தங்க, வைர மணி போன் றுமே என் கண்ணில் படுகின்றது. அவைகளைக் கண்டு களிக்கும் போதாவது நிலைக்கட்டும்'' என்று பலவிதமாக எண்ணி சிந்தித் துக்கொண்டே மற்ற கடிதங்களையும் பார்த்தான். அதற்குள் பிற் பகல் 3 மணிக்குமேலாகி விட்டது.

நித்திரையிலிருந்து சந்திரகாஸனும் எழுந்தான். சாருகாஸன் ஒருவேளை அன்னத்தைத் தவிர வேறு எதுவும் சாப்பிடுவதில்லை யாகையால் சந்திரகாஸனுக்கு மட்டும் டிப்பன் தயாரித்துச் சாப் பிடச் செய்தான். பிறகு இருவருமாக மாலை நேரத்தில் உலாவும் பொருட்டு வெளியில் சென்று வெகுநேரம் கழித்து வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். சந்திரகாஸனைச் சாப்பிட அழைத்தான். சாருகாஸன் ஒரே வேளை உணவுடன் இருப்பதைக் கண்டு மன வருத்த முற்று அவன், "அப்பா! நண்பா! நீ இவ்விதம் காயத்தை உலர்த்துவது நன்றாயிருக்கின்றதா! நான் உன்னைத் தனிமையில் பட்டினியாக உட்காரவைத்து விட்டு மூன்று வேளைப் புசிக்க என் மனம் சம்மதிக்குமா! நீ இப்படி சாப்பாட்டையும் வெறுக்கலாகுமா! உன்னுடைய அருமையான வாழ்வைத் தான் சகலமும் துறந்தாய். சாப்பாட்டையும் ஏன் தள்ளவேண்டும்? உன்னுடைய உழைப்புக் காகவேனும் நீ புசிக்கவேண்டாமா! உடம்பில் தைரியமும், பலமும்

வேண்டாமா! வேண்டாமப்பா! பட்டினி கிடக்கவேண்டாம். நீயும் போஜனத்திற்கு எழுந்து வா!'' என்று சந்திரகாஸன் பலவந்தம் செய்தான்.

இது கேட்ட சாருகாஸன் "உம். நண்பா! சந்திரகாஸா! நான் எப்போது அவ்வூரை விட்டு இங்கு வந்து சேர்ந்தேனே அப்போதே எனது ஆகாரத்திலும் நான் சிரத்தையின்றி சிறிது அலக்ஷியமாகவே இருந்தேன். பிறகு உன்னுடைய கடிதத்தை—ஜெயமணியின் விவாக விஷயமான கடிதத்தைத்—கண்டதும் நான் அவ்விடம் சென்று திரும்பியதோடு சகலத்தையும் துறந்தேன். என்னுடைய வாழ்நாளின் பரிதாபத்திற்கு மூன்று வேளை போஜனமும் வேண்டுமா? தேகமும் கொழுப்பும் வளருவதற்காக வீணே தின்று கெடுவானேன். நான் தின்பதற்காகும் பொருளை ஒரு ஏழை தம்பதிகளுக்குக் கொடுத்தால் வயிறாற உண்டு வாயாற வாழ்த்துவார்கள். பூமிக்குப் பாரமாயும் நிலத்திற்குக் கேடாயும் உள்ள நான் ஏன் போஜனம் செய்யவேண்டும்? நண்பா! நீ இன்று புதிதாகக் காண்பதால் ஏதோ ப்ரமாதமாக எண்ணுகிறாய். இந்த பழக்கம் எனக்கு உண்டாகி வருடக் கணக்காகி விட்டதே! இதைக் குறித்து ஏன் சிந்திக்கின்றாய்? நீ போஜனம் செய்துவிட்டுவா! மறக்காதே! என் மனத்தில் பிணி இல்லாதிருந்தால் தேகத்திற்குப் பிணி உண்டாகும். மனத்தில்தான் பிணி கவசமாய் விட்டதே! இனி எனக்கு வேறு பிணி உண்டாகுமா! ஒருபோதும் வராது. சந்திரா! எழுந்திரு; எழுந்திரு'' என்று வற்புறுத்தினான்.

இதைக் கேட்ட சந்திரகாஸன் நிரம்பவும் மனம் வருந்திக் கண்ணீர் பெருக்கியவாறு "என்னப்பனே! சாருகாஸா! இதைக் கேட்கக்கேட்க என் மனம் துடிக்கின்றதே! ஒரு வேளை யுண்டு உடலை யுலர்த்தி யோகியைப் போல உன் காலத்தைக் கடத்த நேர்ந்துவிட்ட சங்கடத்தை என்னென்பேன்? நண்பா! அதி பால்யத்தில் நீ இத்தகைய வைராக்யத்தைக் கொள்ளலாகுமா! வேண்டாமப்பா! சாப்பாட்டில் குறைக்காதே!'' என்று கூறினான்.

சாரு:—என் நண்பா! நீ அது விஷயத்தில் என்னை வற்புறுத்

தாதே! நான் இவ்விதமான பழக்கத்தைச் செய்துவிட்டதால் எனக்கு ஒருவிதமான கெடுதியு மில்லை. ஆகையால் நீ பயப் படாதே; சாப்பிட வா!—என்று பலவந்தம் செய்து அவனை உண் பித்தான்.

பிறகு இருவரும் நெடுநேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கை யில், ராதாபாயின் வீட்டிற்கு சீமைக்குச் சென்று வந்தவனின் வார்த்தை வந்தது. "அந்த பையன் குணத்திலும் கல்வியிலும் அழகிலும் வெகு மேன்மையாக இருக்கின்றான். அவனுக்கு உன் னுடைய தங்கையை விவாகம் செய்துவிடலா மென்று தோன்று கின்றது. அதை அப்போதே தெரிவிக்க மறந்துவிட்டேன். இது விவரங்களை உன் பெற்றோருக்கு எழுதிவிடு' என்று சந்திரகாஸன் தெரிவித்தான். அது விஷயமாக இருவரும் வெகு நேரம் யோசனை செய்த பின்னர், சாருகாஸன் தன் பெற்றோருக்கு விவரமான கடிதத்தை எழுதினன்.

இரவு முற்றும் பற்பல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்து பிறகு சந்திரகாஸன் நித்திரையில் ஆழ்ந்து விட்டான். சாருகாஸன் மட்டும் நித்திரை கொள்ளாது ஜெயமணியின் கடிதத்தை மீண்டும் படித்தான். உடனே அவ்விருவருக்கும் பதிலையும் எழுதி வைத்தான். ஜெயமணியின் நினைவாகவே மானஸீகக் கோட்டை யமைத்துக்கொண்டு அவளுடைய உருவத்தைக் கண்டு களித்த வாறு நித்திரை செய்யலானன்.

பொழுது புலர்ந்தது; நண்பர்களிருவரும் எழுந்து தம்தம் அலுவல்களைச் செய்யலானர்கள். சாருகாஸன் ஸ்நானம், பூஜை முதலியன செய்து போஜன மருந்திப் பின் ஆஸ்பத்ரிக்குச் சென் ருன். அன்றும் பத்மலோசனு வரவில்லை என்றும், அவளுக்கு இன்னும் உடம்பு குணமில்லை என்றும் தெரிந்தது. "ஐயோ! நம் பொருட்டு அம்மாது உயிரை விட்டு விடுவாளோ!" என்கிற ஏக்கம் அவனை வருத்த வாரம்பித்தது. அன்று ஆஸ்பத்ரியிலிருந்து வீட்டிற்கு வருகையில் அவ் வீடு சென்று அவளைப் பார்த்து விட்டுப் போக சாருகாஸனின் மனம் ஆவல் கொண்டதால் தனது ஆஸ்பத்ரி

உடையுடன் பத்மலோசனுவின் வீட்டிற்குச் சென்ருன். அப்போது அவளுக்கு ஜுரம் 105 டிகிரி இருப்பதால் ஐஸ் வைப்பதும் இன்ஜெக்ஷன் செய்வதுமாக தடபுடல் பட்டுக்கொண்டிருந்தது. பத்மலோசனு கண்களைத் திறக்காது மூடியபடியே சவம் போலக் கிடக்கின்ருள். அவளருகில் லேடி டாக்டரும், நாஸும் இன்னும் இரண்டொருவரும் இருந்தார்கள். சாருகாஸன் அருகில் சென்ருன்; அவனைக் கண்ட லேடி டாக்டர் 'வந்தனம் டாக்டர்! வாருங்கள்" என்று கூறி மரியாதை செய்து உட்காரச் செய்தாள்.

சாருகாஸனும் உட்கார்ந்து "உடம்பு எப்படி இருக்கிறது? இரண்டு நாட்களாக ஆஸ்பத்ரிக்கு வராமையால் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்; ஜுரம் தணிந்துவிட்டதா!" என்று மெல்ல கேட்டான்.

மாது:—இன்னும் தணியவில்லை. 105 இருக்கின்றது. இன்று காலை முதல் ப்ரக்ஞையே இல்லை. ஆகாரமே செல்லவில்லை; பலவந்தமாக செலுத்தி வருகிறேன். தாங்கள் பாருங்கள்" என்ருள். இதுகேட்ட சாருகாஸன் தான் பார்ப்பதற்கு மறுத்தால் சந்தேகம் உண்டாகும். தான் வந்திருப்பதும் பார்ப்பதும் அம்மா தாசிக்குத் தெரிந்தால் ரகஸியம் வெளியாக நேரும். இதற்கு என்ன செய்வதென்று யோசித்தவாறிருக்கையில் பத்மலோசனு தன் போக்காக "டாக்டர்! என் மீது தயவில்லையா! நான் இவ்விதமே இறந்துவிடுவது தான் உமக்கழகோ!" என்று வாய் பிதற்றினுள்.

இதுகண்டு சாருகாஸன் திடுக்கிட்டான். "ஐயோ! என்ன கோரமான காட்சி இவளுடைய படுக்கையும் பிதற்றலும்! இது முன்னெரு காலத்தில் என் கண்மணி ஜெயமணி ஆஸ்பத்ரியில் படுத்திருந்த நினைப்பை உண்டாக்குகின்றதே! என்ன செய்வேன்?" என்று எண்ணியபடியே; பத்மாவின் கை பார்த்து நாடி சரியாக விருப்பது கண்டு சந்தோஷங் கொண்டு அந்த மாதை நோக்கி "அம்மணி! இன்று இரவுக்குள் ஜுரம் குறைந்துவிடும். வாய் பிதற்றல் பித்தத்தினுல் உண்டாயிருக்கிறது. நான் சென்று வருகிறேன். தெளிந்த பின் வருகிறேன்." என்று கூறிவிட்டு வீட்டுக்கு வந்தான். அன்று

வந்த தபால்களைக் கவனிக்கலானன். ஜெயமணியின் புகைப் படமும் கடிதமும் இருக்கின்றனவா வென்று முதலில் கவனித்தான். அவை இருக்கக் கண்டு பேரானந்தங் கொண்டு அதைப் பிரித்துப் பார்த்தான். கங்காதரர் உட்கார்ந்திருக்கவும் ஜெயமணி அருகில் நிற்பதுமாக அப்படத்திலிருந்தது. அதைக் கண்ட சாருகாஸன் கூற வியலாத ஆநந்தத்தை அடைந்தான். என் கண்ணே! ஜெயமணீ! இந்த புகைப் படத்தின் மூலமாகவேனும் என்னைக் களிப்பிக்கும்படியாக கடவுள் அருள் பாலித்ததை எண்ணி மகிழ்ச்சி யடைகிறேன். என் இன்ப வடிவமே! இணையிலா மாணிக்கமே! ஏன் மவுனமாக நிற்கின்றாய்! நான் யார் அன்னியனா! என்னோடு பேச லாகாதா! நான் உன் அன்பனல்லவா! என்னருமைக் கண்மணி நீ யல்லவா! என்னெதிரில் மவுனம் சாதித்து நிற்பது உனக் கழகாகுமா! அன்பாகப் பேசி என்னை இன்புறச் செய்யலாகாதா? ஆ! என்ன மதியீனம்! படத்தைக்கண்டு பேசுகிறேனே! என் கண்மணி என் னெதிரில் இருப்பாளேயானால் என்னுடன் பேசாதிருப்பாளா! அவ்வளவு பாக்கியமும் எனக்கு உண்டா! ஜெயமணி! நீ என்னை அன்புடன் நோக்கி "அண்ணா!" என்றழைத்து அமுது படைத்த நினைவு வருகின்றது. இப்படக் காக்ஷியால் பற்பல விதமான பழங் கால கதைகளெல்லாம் நினைவிற்கு வருகின்றன. இவ்விதமான நினைவுகளை எண்ணி ஏங்கியே என் காலத்தைக் கடத்தும்படியாகக் கடவுள் செய்துவிட்டாரே!" என்று எண்ணியவாறு படத்தைத் தன் கண்ணில் ஒற்றிக்கொண்டு தன் சித்தம் சென்றவாறு முத்த மளித்தும், பின் அதைத் தன் மடியின்மீதே வைத்துக்கொண்டு அப் படத்துடன் கூட வந்த கடிதத்தைப் படிக்கலானன்.

எனதன்பார்ந்த நண்பரே! நேற்று நேரமாய்விட்டதால் இன்று அனுப்புகின்றேன். உமது விருப்பப்படி இப் படத்தையேனும் நான் அனுப்பாவிட்டால் பரம பாதகனாவேன்; ஆகையால் இதை அனுப்பி யுள்ளேன்; பெற்றுக்கொள்ளவும். அடிக்கடி கடித மெழுதவும்.

இங்ஙனம், நண்பன்

கங்காதரன்.

என்றதைப் படித்துப் பின் மற்ருெரு கடிதத்தைப் பிரித்தான். அது ஜெயமணியினுடையதுதான் என்பதைத் தெரிந்துகொண்டதும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்து வெகு ஆவலோடு படிக்கலானுன்.

“என் பிரியமான சாருகாஸா! நீ ஏற்கெனவே இப்பாவிலை எண்ணிப் புலம்புவது போதாதென்று படத்தையும் கண்டுபரிபவப்படுவதற்கு ஆசித்தபடியே, என் பர்த்தா உனக்கு அனுப்பியுள்ளார். இன்று முக்கியமாகக் கடிதம் எழுத முன் வந்ததற்குக்காரணம் நான் நேற்றைய இரவு கண்ட கனவே தான் என்பதைத் தெரிவிக்கின்றேன். சாருகாஸா! நான் நேற்றைய தினம் உனக்குக் கடிதமனுப்பிய பிறகு என் மனமே கலங்கிக் குழம்பிவிட்டது. அந்த வேதனையை மாற்றுவதற்காக ஒரு நாடகத்திற்குச் சென்ருேம். ஐயோ! அந்த நாடகமும் நமது சரித்திரம்போலவே இருந்ததால் எனக்குப் பார்க்கப் பிரியமில்லாமல் ஓடிவந்துவிட்டேன். இரவு போஜனமே கொள்ளவில்லை; வருத்தத்துடன் படுத்துவிட்டேன்! அளப்பரிய யோசனைகளுடன் கண்ணயர்ந்தேன். ஆகா! என் அன்பான சாருகாஸா! எனக்குண்டான கனவின் மகிமையை என்னவென்பேன்:— தேக அசௌக்கியத்தினுல் நான் படுத்திருக்கிறேன். எங்களுடைய வழக்கமான டாக்டர் வந்து மருந்து கொடுத்தான். அப்போது நீயே எனக்கு சிகிச்சை செய்தால் எவ்வளவு நன்ருக இருக்கும் என்று எண்ணியவாறு வருந்தினேன். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு உருவம் என் படுக்கையை நாடி வந்தது. நான் அவ்வுருவத்தைக் கண்டு “யார்!” என்று மெல்ல கேட்டேன். அதற்கு அந்த உருவம் “நான்தான் டாக்டர்.” என்றது. பின்னும் “டாக்டரா!” என்று எங்கள் குடும்ப வைத்தியனின் பெயரைக் கூறினேன். எனக்கு ஜுரமடிப்பதால் கண் சரியாகத் திறக்க முடியவில்லையாகையால் அந்த உருவம் யார் என்பதைத் தெரிந்துகொள்ளக் கூடாது விழித்தேன். பிறகு அந்த உருவம் விசனமான குரலுடன் “என் கண்மணி! நான் யார் என்பது உனக்குத் தெரியவில்லையா! நான் உன்

னுடைய அன்பான டாக்டர் சாருகாஸனல்லவா! உன்னுடைய பிணியை நிவர்த்திக்கும் பொருட்டாக நான் வந்தேன்.'' என்று கூறிக்கொண்டே நீ என்னருகில் வந்தாய்! இம்மொழியைக் கேட்ட நான் வியப்புற்று, "ஹா! உண்மையில் நீ சாருகாஸனு! சாருகாஸனு! நீ கூறுவது நிஜந்தானு!'' என்றேன். அதற்கு நீ மெல்லிய குரலில் பேசத்தொடங்கி "என்னுருயிர் ஜெயமணி! நான் உண்மையில் உன்னுடைய சாருகாஸனே யாவேன். இதோ நான் உன் கையைப் பிடிக்கின்றேன். அதிலிருந்தே நீ நன்கறியலாகும்.'' என்று கூறியவாறு என்னருகில் உட்கார்ந்து என் கையைப் பிடித்தாய்! அந்தோ! அந்தப் பிடியி னுடைய அருமையை என்னென்பேன்? சாருகாஸன்தான் என்பதை சந்தேகமறத் தெரிந்துகொண்டு கண்ணீர்விட்டேன்.

பிறகு நீ "ஜெயமணி! புலம்பாதே! நாம் உருவத்திலும் அனுபவத்திலும் பிரிக்கப்பட்டு வேருக விருப்பினும் நமது ஆத்மாமட்டும் எப்போதும் ஒன்ருக லயித்தது. அதை மனிதரால் மாற்ற இயலாது. உனக்கு ஜுரமுமில்லை; நோயுமில்லை. வீணுக மருந்துகளைச் சாப்பிட்டு ஏன் அவஸ் தைப்படவேண்டும்? நாம் ஒருவரையொருவர் பிரிந்திருப்பதே வியாதியும் பாதையுமேயன்றி வேறில்லை என்பதை நான் கூற வேண்டுமா? கண்மணி! எழுந்து உட்காரு.'' என்று கூறியபடி என்னைத் தூக்கி உட்காரச்செய்து...நீயோ அன்னியன்; நான் அன்னிய மாது, அவற்றைக் கூறவும் கூசுகின்றது. அவைகளை கடவுளுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன். சாருகாஸா! நாமிருவரும் வெகு நேரம் இன்பகரமாகப் பேசிக்கொண்டே இருக்கையில் திடீ ரென்று விழித்துக்கொண்டேன். ஐயோ! அப்போதுண்டான துக்கத்தைக் கூறவே சாத்யமன்று. ஆகா! இந்நேரம் கண்ட தெல்லாம் கனவுதானு! என் பிறவியே கனவு போன்று ஆய்விட் டது! நான் என் அன்பான சாருகாஸனிடம் பேசியதெல்லாம் வீணன கனவின் தோற்றமா! ஐயோ! என் செய்வேன்?''என்று அலறினேன். நான்மட்டும் தனிமையிலிருக்கக் கண்டேன்.

நீ மாயமாய்விட்டாய். உன்னைக் காணாமல் உயிர் துடித்தது. என்னையறியாது நான் புலம்பிவிட்டேன். இந்த வேதனைகளினால் நா வரண்டு மாரடைத்துவிட்டது. வாய் பேச வரவில்லை. கண்களில் நீர் சுனையாகிவிட்டது. படுக்கையைவிட்டு அசைய மாட்டாது தவித்தேன். என் ப்ராணன் போய்விடும்போலாய் விட்டது. ஐயோ! ப்ராணன் போய்விட்டால்தான் நான் பேரானந்தமடைவேனே! அது எனக்குக் கிட்டுமா? பிறகு மெல்ல கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். என் பர்த்தா தூங்கிக்கொண்டிருந்தார். எனக்குண்டான அவ்வேதனைகளே மரண வேதனை என்று நினைத்தேன். நான் நிச்சயமாக இறந்துவிடுவேன் என்றும் சிறிது எண்ணினேன். மெல்ல சமாளித்துக்கொண்டு என் பர்த்தாவை எழுப்பினேன். அவர் எழுந்து 'என்ன?' என்று விசாரித்தார். என்னைக் கண்டு நிரம்பவும் பயந்துவிட்டார். தண்ணீர் வேண்டுமென்று நான் கேட்டேன்; அவர் தண்ணீர் கொடுத்தார். அதைப் பருகிய பிறகு சிறிது நேரஞ் சென்று சற்று சமாதானமாயிற்று. என்னுடைய மாருட்டமான நிலைமையைக் கண்டு வருந்தி பயந்த என் பர்த்தாவிடத்தில் இக்கனவைத் தெரிவித்தேன். அதைக் கேட்டு அவரும் கண்ணீர் விட்டார்.

சாருகாஸா! இனி யார் கண்ணீர்விட்டுப் பலன் யாது? யார் வருந்தி உபயோகமென்ன? இந்த கனவு உண்மையாக இருக்கலாகாதா! என்று பாழும் மனம் பின்னும் பின்னும் எண்ணிற்று. நீ தெரிவித்ததுபோல என் மனத்தை நான் கண்டித்து செருப்பாலடித்தேன். அப்போதுதான் மணி இரண்டடித்தது. அதற்குமேல் எனக்கு நித்திரை கொள்ளவில்லை; ஆகையால் ஏதேதோ புத்தகங்களைப் படித்துக்கொண்டே அப்பாழும், கொடிய—சண்டாள—இரவைத் தொலைத்து எழுந்தேன். உடனே இந்த கடிதத்தை உனக்கு எழுத என் மனம் தூண்டியதால் எழுதத் துணிந்தேன். — தொடங்கினேன்— இதை முடித்து என் பர்த்தாவிடம் கொடுத்து அனுப்பச்செய்கிறேன். சாருகாஸா! நான் புலம்பிய மிச்சம் பாக்கியுள்ளதை

நீயும் புலம்பிவிடு. பரஸ்பரம் புலம்பலைத் தவிர வேறில்லை. ஆகையால் அதைக்கூறுவதைத் தவிர வேறு விஷயமும் இல்லை. நான் எதைத்தான் எழுதுவது? அக்கனவு எனக்குக் கனவாகவே தோன்றவில்லை. உண்மையாக நேரில் நடப்பதுபோலவே தோன்றியது. உம். நமது பிறவியே கனவின் தோற்றமாகி விட்டது. இனி விசனித்து விமோசனமேது? சாருகாஸா! ஏதோ தோன்றியதை எழுதினேன். இதைக் கண்டும் நீ ஆநந்தமே கொள்வாய் என்பதை அறிவதால் இதை எழுதி விட்டேன்.

தற்போது ஒன்றும் எழுதக்கூடவில்லை. சாகரத்தின் அலைகளுக்கு ஓய்வும் உண்டா! அதுபோல நமது துயரத்திற்கு ஒரு எல்லையுண்டா! இரண்டுமில்லை. ஆகையால் இம்மட்டுடன் நிறுத்துகின்றேன்.

இங்ஙனம்
அபாக்யவதியான
ஜேயமணி.

இதைப் படித்தான்; துயரால் துடித்தான்; வருத்தத்தினல் வாடினன். ஐயோ! சாகர அலைகளைப்போலவே நமது கதியும் முடிந்ததென்பதை எத்தனை பொருத்தமாக எடுத்து வரைந்திருக்கிறாள். என் கண்மணி! ஜெயமணி! உன்னுடைய கடிதங்கள் ஒவ்வொன்றிலும் அத்புதமான பதங்களையும் விஷயங்களையும் சேர்த்து என்னை ஆநந்தத்திலும், அளப்பரிய ஆச்சரியத்திலும் வீழ்த்திவிடுகின்றாயே! என் கண்மணி! ஜெயமணி! நயமணி! அபயமணி! நிர்ப்பயமணி! சுயமணி! உன்னுடைய புத்தி சூட்சுமத்தைப் புகழ்வதா! அரிய குணத்தை அரைகுவதா! உத்தம லக்ஷணத்தை உரைப்பதா! எல்லாவற்றையும்விட என்னைப் பித்தனுக்கிவிட்டதை — கொள்ளையடித்துவிட்டதை — மெள்ள விளம்புவதா! ஒன்றுமே தோன்றவில்லை. நீ சொல்லியதுபோல கண்ணீர்தான் முதன்மை ஸ்தானம் வகித்துக்கொண்டு வந்துவிடுகிறது. என்ன செய்வேன்? ஆகா! நீ நோயினல் படுத்த சமயத்திலாவது நான் சிகிச்சை செய்யும் பாக்யம் பெற்றிருக்கின்றேனு! அதற்கும் என்னை ஊரைவிட்டுக் கடவுள் ஓட்டிவிட்டார். என் வினை என்னைப்பிடித்து ஆட்டுவது ஒன்று இரண்டா என்று எண்ணிப் புலம்பியபடியே படத்தையும் கடிதத்தையும் பெட்டியில் வைத்துவிட்டு சாய்மான நாற்காலியில் விசனத்துடன் சாய்ந்து, வெளியில் சென்ற சந்திரகாஸனின் வருகையை எதிர்பார்த்திருந்தான். எண்ணுததும் எண்ணி மனம் தவித்தவாறு சோகாக்ராந்தனய் "என்னப்பனே! ஆதி மூர்த்தியே! புரி

என்னைப் பிறப்பித்தாய்! பித்தனுகச் செய்தாய்! ஓயாக் கவலைக்கு ஆலயமாக்கினுய்! இச்சித்த பண்டத்தை ஈயாது வருத்திவிட்டாய். யாவுந் தான் முடிந்தன. இனி ஒன்றும் பாக்கி யில்லை. இப்பாழும் மனமாகிய சமுத்திரத்தில் கவலை, துன்பம், ஏக்கம் என்கிற அலைகளுக்கு ஒரு சிறிது ஓய்வு மட்டுமேனும் அளிக்கமாட்டாயா! என்னுடைய பிறப்பின் பயன் போதும்; போதும்; போதும் என்று வாதனைப் பட்டு ஓதும்படியாகச் செய்துவிட்டாய். இம்மட்டுடன் என்னை உன் பாதத்திலாவது சேர்த்துக்கொண்டு என் பரிபவத்தைப் போக்கமாட்டாயா? அதற்கும் உன் மனம் இளகவில்லையா! ஜகதீசா! எனக்கு இன்பம் தீராத் துயரமாயும், எனக்கு ஆனந்தம் ஓயாப் புலம்பலாயும், எனக்கு துணைவற்ருக் கண்ணீராயும் அளித்து என்னை வாட்டி வருத்துவது போதாதா? இம்மட்டுடன் என்னை விடுதலை யடையச் செய்யமாட்டாயா! கருணு மூர்த்தி! கஞ்சலோசனு!'' என்று வருத்தமுற்றுப் படுத்திருந்தான்.

வெளியில் சென்றிருந்த சந்திரகாலனும் வந்து சேர்ந்தான். சாருகாலன் நிரம்பவும் வருத்தமாயிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு, "நண்பா! சாருகாலா! உனது முகம் புதிதான வருத்தத்தி லாழ்ந்திருப்பது போலத் தோன்றுகின்றதே! என்ன விசேஷம்?'' என்று மிகுந்த கனிகரத்துடன் விசாரித்தான். இதைக் கேட்ட அவன் "சந்திரகாலா! நண்பா! எனக்குள்ள வருத்தத்தில் புதிது என்றும் பழமை என்றும் வேற்றுமை யுள்ளதா! அதெல்லாம் ஒன்று மில்லை. என் கண்மணியின் புகைப் படத்தை அனுப்பும்படியாகக் கேட்டிருந்தேன். அது இன்றே வந்தது. அதைக் கண்டு வருத்த முற்றேன்; வேறென்று மில்லை. நீ இத்தனை நேரம் எங்கு சென்றிருந்தாய்?'' என்றுன்.

சந்தி:—உலாவி வரலா மென்று சென்றேன். இவ் வூரிலும் எனக்குத் தெரிந்தவர்கள் சிலரைக் கண்டேன். அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன்—என்றுன்.

இவ்விதமே பின்னும் சில நாட்கள் சென்றன. சாருகாலனுக்கு ஒரு தந்தி வந்தது. அதாவது—டாக்டர் சோமநாதன் விவாகத்திற்கு சம்மதித்து விட்டதாயும், உடனே வந்து முகூர்த்தம் வைத்து விவாகம் செய்துவிடலா மென்றும், சந்திரகாலனைத் தான் பார்த்திருப்பதாயும் அதில் கண்டிருந்தது. இதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த சாருகாலன் "நண்பா! நான் தெரிவித்தது போலவே சோமநாதன் பூர்ணமான சம்மதத்துடன் ஒற்றுக்கொண்டு தந்தி யடித்துவிட்டான் பார்த்தனையா! இனி உனது மனிதர்களிடம் கலந்து பேசி முகூர்த்தம் வைப்பதுதானே பாக்கி. இனித் தாமதிக்காது தகுந்த ஏற்பாடு செய்வதைக் கவனி. இன்றே நீ புறப்பட

வேண்டும்; நானே உன்னைத் தள்ளுகிறேன்." என்று நகைத்துக் கொண்டே சொன்னான்.

இதுகேட்ட சந்திரகாஸன், "நண்பா! நீ ஏதோ நகைத்தவாறு கூறுகிறாய்; வாஸ்தவந்தான். எனக்கென்னவோ உன் விஷயமாக யோசிக்கையில் ஏதோ செய்கிறது. என் செய்வேன்? நான் உன்னைப் பார்க்கவேண்டுமென்ற பேராவலினால் ஓடி வந்ததற்கு எனக்கு நன்மையே கிடைத்துவிட்டது. அதுபோல உனக்கு அவ்விதமான நன்மைகளுண்டாகி நான் பார்ப்பதல்லவா எனக்கு மகிழ்ச்சியாகும். நீ புலம்பவும், நான் நகைக்கவும் எவ்வளவு வித்தியாசமாக விருக்கிறது. இதை நினைக்கத் தான் என் மனம் பகீர் என்கிறது. நான் என்ன செய்வேன்? அப்பா சாருகாஸா! வேண்டாமடா! வைராக்யம் வேண்டாமடா! என் வார்த்தைப்படி ஒரு மடமயிலை—ஏன்? பத்மலோசனாவை—மணம் செய்துகொள்ளலாகாதா! என் வார்த்தையைக் கேட்கமாட்டாயா! நான் உன்னுடைய கஷ்டத்தை யறிவேன். எனினும், இனி அதை எண்ணிப் பயனில்லை யாதலால் கூறுகிறேன். என்மீது வருத்தங் கொள்ளாதே! நான் உன்னுடைய உடன்பிறந்தவன் போன்ற முறையில் சொல்கிறேன். நான் உன்னைப் பிரிந்த இத்தனை நாளாக உன்னைப் பார்க்காமல் நான் பட்ட பாட்டைக் கடவுள் தான் அறிவார். எப்போது உன்னைப் பார்க்கப் போகின்றேன் என்கிற அவாவினால் ஓடிவந்த இடத்தில் என் மனோரதம் பூர்த்தியாகிவிட்டது சந்தோஷமெனினும் உன்னுடைய நிலைமையை எண்ணி என் மனம் வேதனை அடைகின்றதே!" என்று வருந்திக் கொண்டே கூறினான்.

இதுகேட்ட சாருகாஸன் விசனக் குறியுடன் நகைத்துக் கொண்டே "நண்பா! நீயும் வந்த நாள் முதலாக இந்த விஷயத்தையே சதா சொல்லிக்கொண்டிருக்கிறாய், இதில் சிறிதும் பயனில்லை. எனக்கு இனி இம்மையில் சந்தோஷம் கிடையா தென்பதைப் பன் முறையும் கூறுவேன். நண்பா! உன் மனம் தவிப்பது உன்னன்பின் காரணமே யாகும். நீயும் நானும் உயிர் நேசர்கள் என்பதற்கு அறிகுறியாய் நீ விவாகம் செய்துகொண்டு குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாக விருப்பதைப் பார்க்கின்றதே எனக்குப் பேரானந்தமும், உண்மை சிநேகத்தின் உயரிய நோக்கமும் ஆகும். ஆகையால் நீ இன்றே கிளம்பு. உன்னிடம் நான் விரிவான கடிதம் ஒன்று சோமநாதனுக்குக் கொடுக்கின்றேன். அதை எடுத்துக்கொண்டு சென்று அவனிடம் அளித்துவிடு. பிறகு முகூர்த்தம் வைத்ததும் கடிதம் போடு; நான் வருகிறேன். இன்றைய இரயிலுக்கே புறப்படு" என்று மிகவும் பணிவாயும் கனிவாயும் கூறினான்.

சந்திரகாஸன் யாதொரு பதிலும் பேசமாட்டாது தியங்கினான். தான் விவாகத்தை நிறுத்திவிடலாமா என்றும் எண்ணினான்; பலவிதமான யோசனைகளால் உந்தப் பட்டு கட்டு மீறிய குழப்பத்தையடைந்து தவித்தான். சகலமான ஏற்பாடுகளும் செய்தபிறகு இனி விவாகத்தை நிறுத்துவதும் அழகல்ல. அதோடு அந்த பெண்மணியின் மீது கொண்டுள்ள காதலை மாற்றவும் கூடவில்லை. இவ்வித சிக்கலான—நெருக்கடியான — நிலைமையில் நிரம்பவும் கலங்கி சற்று நேரம் பிரமித்து உட்கார்ந்திருந்தான். "நான் என்ன சொல்லிய போதிலும் சாருகாஸன் மணம் செய்துகொள்வதாகக் காணப்படவில்லை. அவன் காலம் முற்றும் இவ்விதமே வீணாகக் கழிக்கும்படியாகிவிட்டதே! என்ன கர்மம்! என்ன பொறுமை! என்ன விரக்தி! உம்; காதல் என்றால் இவனுடைய காதலல்லவா உத்க்ருஷ்டமானது! என்ன மேன்மையான போக்கு!" என்று தனக்குள் பலவிதமாக எண்ணியபடியே சாருகாஸனை இறுகக் கட்டியணைத்துக்கொண்டு "ஹா! என்னப்பனே! சாருகாஸா! நான் என்னவென்று சொல்வேனடா! என் மதியே மங்கிவிடும்போல இருக்கின்றதே! சினேகிதத்தை விட உயர்ந்த முறை எதுவுமில்லை என்பது உண்மையாக விருப்பினும் இப்போது நம்முடைய அனுபவத்தில் அதுவும் போய் விட்டதே! உன்னுடைய உயிர் நண்பனாக நான் இருந்தும் என்னுடைய சுகத்தையும் சந்தோஷத்தையும் தானே நான் தேடிக் கொள்கிறேன். உன்னைப் போல நானும் உறுதி கொண்டு நின்றேனா! உன் மன உறுதியை எந்த விதத்திலும் மாற்றக்கூடவில்லையே! என்ன செய்வேன்? சாருஹாஸா! நானும் இவ்விவாகத்தை நிறுத்தி விடுகிறேன்!" என்று அபாரமான வருத்தமேலிட்டால் புலம்பிக்கொண்டே கூறினான்.

இவனுடைய ஆழ்ந்த அன்பையும், மன மாறுபாட்டையும் கண்ட சாருகாஸனின் மனமும் இளகி வருந்தியது "ஐயோ! இவனும் நம்மைப் போல ஒண்டிக் கட்டையாகி விடுவானோ! என்ன விதமாகவாவது இவனை விவாகம் செய்துகொள்ளும்படியாகச் செய்துவிடவேண்டும். மகா பாவியாகிய நான் தனிக் கட்டையாகி, தவிப்பது போதும்" என்று தனக்குள் எண்ணி சந்திரகாஸனை நோக்கி "நண்பா! உன்னுடைய கரை காணாத வாஞ்சையைக் கண்டு களிப் பெய்தினேன். நீ என்மீது உண்மையான நேசம் வைத்திருப்பது உண்மையாயின் நீ மறுபேச்சின்றி விவாகம் செய்துகொள்ளவேண்டும். என்னுருயிர் ஜெயமணியை இச்சித்த மனத்தினால் நான் மற்ற அவமணியை இச்சிப்பேனா! சீச்சீ! அது ஒருபோதும் நடவாத காரியம்; அதை இனி வற்புறுத்தாதே! நீ எனது உண்மையான உயிர்த்தோழனாக விருக்கும் பக்ஷத்தில் நீ விவாகம் செய்துகொண்டு உனக்குப் பிறக்கும் குழந்தைகளில் ஒன்றை

எனக்கு, நீ உனது அன்பின் அடையாளமாகப் பரிசளித்துவிடு. அந்த குழந்தையை நான் ஸ்வீகரித்துக்கொண்டு எனது வம்சத்திற்கு ஓர் வழி யுண்டாக்குகின்றேன். இந்த முறையைத் தவிர இனி என் வம்சம் விளங்க வழி கிடையாது. நீ இந்த உதவி செய்தால் அவ்வகையிலாவது நான் சந்தோஷமடைவேன். என் குலம் பாழாகி அடைத்து விடாது விளக்கு வைத்து விளங்கட்டும். இதை நீ எனக்குச் செய்துதான் தீரவேண்டும். நண்பா! புலம்பாதே! மகா கொடிய பாபியாகிய எனக்கு நான் இச்சித்த இவ் விச்சையை யேனும் பூர்த்தி செய்து களிப்பளிப்பாய்!'' என்று நிரம்பவும் உருக்கமாயும், கேட்போர் மனங் கரையும் வண்ணமாகவும் மொழிந்து, மீண்டும் ''நண்பா! என்ன புலம்புகின்றாய்! என்னு வலைத் தீர்ப்பாயா?'' என்றான்.

இந்த மகா பரிதாபகரமான வார்த்தையைக் கேட்ட சந்திரகாஸன் தாங்கவியலாத பரம துக்கமடைந்து, தன் தேகம் குலுங்கப் புலம்பியபடியே சாருகாஸனின் கரத்தைப் பற்றிக்கொண்டு ''என்னப்பனே! சாருகாஸா! இதற்குப்பதில் நான் என்னடா சொல்வேன்? என்னை வாய்ப்பூட்டுபோட்டு மடக்குவதுபோல மடக்கிவிட்டாயே! பாவி என்னால் நீ பெறவிருக்கும் சந்தோஷத்தைக் கடவுளல்லவா பூர்த்தியாக்கவேண்டும். என்னப்பனே! நண்பா! இனி தடை சொல்லமாட்டாது தடைகட்டிய நாகமாய்விட்டேன். என் மூலமாக நீ விரும்புவதை உன்னிஷ்டம்போல அடைவதற்கு எனக்கு ஒரு சிறிதும் ஆக்ஷேபனை இல்லை. இது சத்தியம். அவ்விதமான உபகாரமும் நான் செய்யாவிட்டால் நான் உனக்கு நண்பனாக யோக்யதை உண்டானவனாவேனா! அப்படியே ஆகட்டும். உன் விருப்பப்படியே நான் இனி ஒவ்வொரு விஷயத்திலும் நடக்கச் சித்தமாக இருக்கின்றேன். பாழும் மணியும் ஆய்விட்டது. இன்னும் சிறிது நேரங் கழிக்கவும் பாக்யமற்றுவிட்டது. இரயிலுக்கும் நேரமாகிவிட்டது. சரி. இனி புறப்படவேண்டியதுதான்.'' என்றான்.

பிறகு சாருகாஸன் எழுந்து சந்திரகாஸன் ஊருக்குப் போக வேண்டியதற்கான சகலமான ஏற்பாடுகளையும் செய்து அவனுடன் தானும் ரயிலுக்குச் சென்று, ரயில் ப்ரயாணச் சீட்டு வாங்கிப் பின் சந்திரகாஸனைப் பிரிய மனமில்லாமல் இருவரும் கட்டித் தழுவி புலம்பிக்கொண்டே சிறிது தயங்கினார்கள். பின்னர் சந்திரகாஸன் வண்டி ஏறினான். வண்டி புறப்படும் பரியந்தம் பேசிக்கொண்டிருந்துப் பின் வண்டி புறப்பட்டதும், சந்திரகாஸனின் தலை மறையும் பரியந்தம் சாருகாஸன் தன் கைக்குட்டையால் வீசியபடியே ''சந்தோஷமாகப் போய்விட்டுவா!'' என்று பன்முறை கூறினான். சந்திரகாஸனும் தன் தலையையும் கையையும் வெளியில் நீட்டியபடியே ''நான்

சென்றுவருகிறேன்" என்று கண்ணீர் பெருகக்கூறி, கையால் சைகை செய்தபடியே சென்றான். வண்டியும் கனவேகமாகச் சென்று மறைந்தது. பிறகு சாருகாஸன் கண்ணீர் பெருகிய வண்ணமே வீட்டுக்குத் திரும்பி வந்தான். பலவிதமான துயரத்தினாலும், மன வேதனையினாலும், சந்திரகாஸனைப் பிரிந்த பிரிவாற்றாத் துயரத்தினாலும் மனவேதனைகொண்டு படுத்துவிட்டான். சாகரத்தின் அலைகளுக்கு ஓய்வுதான் உண்டா! என்றபடியே சாருகாஸனின் நிலைமை இருந்தது.

இவ்விதமே சில தினங்கள் கழிந்தன. சந்திரகாஸனிடமிருந்தும், சோமநாதனிடமிருந்தும் கடிதங்கள் வந்தன. சாருகாஸன் அவைகளை ஆவலோடு படிக்கலானான்.

"என் அன்புமிக்க டாக்டர் சாருகாஸனுக்கு! அநேக வந்தனம். நீ அனுப்பிய கடிதத்தையும், மாப்பிள்ளை சந்திரகாஸனையும் பார்த்தேன்; சகல செய்தியையும் அறிந்தேன். விவாகத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்துவருகின்றன. இம்மாதம் 29-தேதி முகூர்த்தமும் பார்த்தாயிற்று. நீ இந்தக் கடிதம்கண்டவுடனே வந்து விவாகத்தை நடத்திவைக்கக் கோருகிறேன். நான் எனது ப்ரேமாபாயை உனக்கே கொடுத்து மகிழ எண்ணினேன். அந்தவிதம் நடக்காவிடினும் உன்னுடைய ஆப்த நண்பராகிய வக்கீல் சந்திரகாஸனுக்குக் கொடுத்து ஆநந்திக்கப் பிராப்தமுண்டாயதுபற்றி சந்தோஷம். விவாகத்தை அடையாற்றிலுள்ள எங்களது பெரிய பங்களாவில் நடத்துகின்றதாக ஏற்பாடு செய்தாய்விட்டது. எங்கள் மனிதர்கள் எல்லோரும் அடையாருக்குச் சென்றுவிட்டார்கள். நீ கட்டாயம் வந்துவிடு. 4, 5—நாள் முன்னரே வந்து சேர்ந்துவிடு; நீ வந்தபிறகுதான் மேலேயாகவேண்டியதைச் செய்யவேண்டும். அப்போது நேரில் பேசிக்கொள்ளலாம்.

இங்ஙனம்
உன் வரவை எதிர்பார்க்கும் நண்பன்
சோமநாதன்.

அதைப் படித்ததும் அவன் சந்தோஷமடைந்தான். பிறகு சந்திரகாஸனின் கடிதத்தைப் படிக்கலானான். அது பின்வருமாறு.—

"என்னுயிரினுமினிய நண்பன் சாருகாஸா!

நான் சுகமே வந்துசேர்ந்தேன். உன் முகம் மறையும் வரையில் நான் உன்னையே பார்த்துக்கொண்டிருந்தேன். பாழும் வண்டி வேகமாகப் போய்விட்டதால் உன் முகத்தை

அதிசீக்கிரத்தில் மறைத்துவிட்டது. உன்னுடைய நினைவாகவே ரயில் பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஊருக்குச் சென்றேன். நீ கொடுத்த கடிதத்தை எனது வேலைக்காரன் மூலமாக டாக்டருக்கு அனுப்பினேன். அன்றிரவே அவரும் பின்னும் இருவரும் என்னில்லம் வந்து என்னைக் கண்டு வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து எல்லாம் அநுகூலமாகவே முடித்துக்கொண்டு சென்றார். மறுதினமே முகூர்த்தம் பார்த்ததில் 29-தேதியன்று முகூர்த்தம் கிடைத்துவிட்டது. நீ 5, 6 நாள் முன்னமே வந்துவிடு. நீ வந்தபிறகுதான் நான் செய்யவேண்டிய வேலைகள் யாவும் நடக்கவேண்டும். ஆகையால் தாமதமன்னியில் வந்துவிடு. மற்றவைகளைப்பற்றி நேரில் பேசிக்கொள்ளலாம். உன்னுடைய நினைவாகவே இருக்கிறேன். உன்னுடைய துயரத்தை எண்ணியே என் மனம் உருகுகின்றது. உம். கடவுள்தான் உனக்குக் கருணை பாலிக்கவேண்டும். கட்டாயம் தட்டாமல் வந்துசேரு.

இங்ஙனம்
உன் வரவை ஆவலோடு
எதிர்பார்க்கும் நண்பன்
சந்திரகாஸன்."

29-ம் தேதிக்கு இன்னும் 10 தினங்களே இருக்கின்றன. ஆகையால் இன்னும் நாலைந்து நாளில் நாம் புறப்படவேண்டும்'' என்று சாருகாசன் தீர்மானித்தான். பிறகு தனது வேலைகளைக் கவனிக்கலானான். பின்னும் சில தினங்கள் சென்றன. சாருகாஸன் புறப்படவேண்டிய தினமும் வந்தது. ப்ரயாணசித்தமானான். தான் சென்னப்பட்டணத்திற்குச் செல்லும் மத்தியில் கல்கட்டாவில் இறங்கி தன் காதலியை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டுச் செல்லவேண்டுமென்ற தடுக்கவியலாத கடும் ப்ரியம் உண்டாகியதால் அவ்வாறே செய்ய எண்ணி கல்கட்டாவில் இறங்கி ஜெயமணியின் வீட்டிற்குச் சென்றான்.

நாம் முன்னர் தெரிவித்ததுபோல கங்காதரருக்கு லீவு வந்துவிட்டதால் அவர்கள் அவ்வூரைவிட்டுப் போய்விட்டார்கள். தன் காதலியைத் தேடி வந்தும் அவளுடைய தரிசனம் கிடைக்காமையால் வருந்தியவாறு மீண்டும் ப்ரயாணமாகி மெட்ராஸை அடைந்தான். இவன் வருந் தேதியை ஏற்கெனவே கடிதமூலமாகத் தெரிவித்திருந்தபடியால் சந்திரகாஸன் ரயிலடியில் வந்திருந்து சாருகாஸனை அழைத்துக்கொண்டு போனான். இருவரும் அடைந்த ஆநந்தத்திற்கு எல்லையே இல்லை. அடையாற்றில் கலியாணம் நடந்

கப்போகும் பங்களாவிற்கடுத்த பங்களாவில் பிள்ளை வீட்டாருக்கு இடம் நியமிக்கப்பட்டிருந்தது. அவ்விடத்திற்குச் சாருகாஸன் சென்றான். சந்திரகாஸனின் பந்துக்களும் வந்து சேர்ந்தார்கள். சந்திரகாஸன் சாருகாஸனை வைத்துக்கொண்டு அவனுடைய தோரணைப்படிக்கே சகலமான காரியங்களையும் செய்தான். குறித்த முகூர்த்த நாளும் வந்தது. வெகு விமரிசையாகவும் அபாரமான ஆடம்பரத்துடனும் சுபமுகூர்த்தத்தில் குறித்த லக்னத்தில் சந்திரகாஸனுக்கும் ப்ரேமாபாயிக்கும் விவாகமஹோற்சவம் நடந்தேறியது. சாருகாஸன், சோமநாதனுக்கும் சந்திரகாஸனுக்கும் பொதுமனிதனாகிவிட்டதால் இருதாரத்தாருக்கும் அவன் நடுநாயகமாக விளங்கினான். விவாகத்தின் அன்று அருமையான சங்கீதக் கச்சேரியும் நடந்தது.

சாருகாஸன் அங்கு அருகிலுள்ள தியஸாபிகல் ஸொஸைடியைப் பார்க்கும் பொருட்டு அங்கு சென்றான். அந்த கட்டிடத்தை முற்றிலும் சுற்றிப் பார்த்தான். அந்த அற்புதமான கட்டிடத்தின் வனப்பைக் கண்டு ப்ரமித்தவாறு முற்றிலும் பார்த்துவிட்டுப் பிறகு அந்த தோட்டத்தையும், அங்குள்ள நீரோடையையும், தோட்டத்தின் அபாரமான அழகையும் பார்த்து மனம் பூரித்தான். "ஆகா! இச்சமயம் இந்த ரம்மியமான தோட்டத்தில் ஜெயமணியும் கூட இருப்பாளாயின் எவ்வளவு அழகாகவிருக்கும்? என்ன அருமையான வேலைப்பாடுகள் அமைந்துள்ளன!" என்று வர்ணித்துக் கொண்டே அந்தத் தோட்டத்தின் ஒரு பாகத்திலுள்ள பெரிய ஆலமரத்தின்பக்கமாக வந்தான். அதைக் கண்டு "ஆகா! இந்த ஆலமரத்தின் அழகை வர்ணிப்பதென்றால் சாமானியமாகுமா! என்ன ஆச்சரியமாக இம்மரம் படர்ந்திருக்கின்றது. இந்த ஒரு விருக்ஷமே பெருத்த கூடாரம்போலாய்விட்டதே! இதனுடைய விழுதுகளே அளப்பரிய மரங்களாகிவிட்டனவே! என்ன அற்புதம்! என்ன சிங்காரம்! ஆகாகா!" என்று வியந்தவாறு அந்த மரத்தின் அருகில் வந்தான். அங்கு அமைக்கப்பட்டுள்ள ஆசனத்தில் அவன் சற்றும் எதிர்பாராததும், கனவிலும் கருதாததுமாக அவனுடைய காதலியும் அவளுடைய புருஷனும் உட்கார்ந்திருக்கும் திருக்கோலக் காட்சியைக் கண்டு கட்டுமீறிய வியப்பும், பரமானந்தமும் கொண்டு, "ஈசா! உன்னுடைய அருள்தான் என்னே! ஹா! இங்கு வீற்றிருக்கும் அணங்கு என் கண்மணியா! என்னைக் களிப்பிக்க வந்த கற்பக மணியா!" என்று தனக்குள் சொல்லவறியாத அபாரமான ஆச்சரியத்திலாழ்ந்து, ஆநந்தப் பரவசனாய் மெய்ம் மறந்து, இமை கொட்டாது பார்த்தவண்ணமே நின்றுவிட்டான்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.,

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர். டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:—

அனுமதிக்கப்பட்ட மூலதனம்	.... ரூ.	6,00,00,000
பதிவு செய்யப்பெற்ற ,,	.... ரூ.	3,56,05,275
வசூலான ,,	.... ரூ.	71,21,055

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:—

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டர்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜன்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சுமானேஜர்,

4, முதல் லைன் பீச், சென்னை.

அதியற்புதமான பன்னிரண்டு

நாவல்களின் களஞ்சியம்

“ பன்னிரு மரகதங்களின் மர்மம் ” என்ற நூல் 12 அபூர்வமான நாவல்களின் களஞ்சியமாகும். ‘பிரஜானுகூலன்’ நேயர் ஆநந்தத்துடன் வாசிக்கத் தருந்தது. இதிலுள்ள நாவல்களின் விவரம்.—(1) மோகனராமன், (2) சாணக்கிய தந்திரம், (3) மாலதீ மாதவம், (4) கிராதார்ஜுனீயம், (5) அதிர்ஷ்ட உருமால், (6) ஜோதிஷ்மதி, (7) சந்திரா, (8) சிங்காரத்தின் காதல், (9) மோஹன கல்யாணி, (10) கொடுத்தும் கெட்டபெயர், (11) திக்கற்ற இரு பெண்மணிகள், (12) மாமனார் மாறிய விசித்திரம். **இந்த ஒவ்வொரு நாவலும் மிக்க அருமையானவை.** இத்துடன் (1) சிநேக அனுபவங்கள், (2) உலக அனுபவங்கள், (3) வடமொழித் திரட்டு, (4) நீதிலதா, (5) ஆங்கிலப் பழமொழிகள், (6) பிரபஞ்ச விலாசம், (7) மாதங்களைப் பற்றி, (8) கடிதங்களின் ரகசியம், ஆக வேறு எட்டு விஷயங்களும் கண்டறிந்து அனுபவமாய் எழுதப்பட்டிருக்கின்றன. 650 பக்கங்கள் கொண்டது. **விலை ரூபா 3. உடனே** எழுதுங்கள்,

இந்நாவல் “ பிரஜாநுகூலன் ” பத்திராதிபர் இயற்றியது, ஒவ்வொரு பக்கமும் அநுபவங்களும், நீதிகளும், உயரிய கற்பனைகளும் நிறைந்து வசீகரிக்கின்றது. இது ஒரு குடும்ப பொக்கிஷமாகும். எல்லாம் புதிய போதனைகளாகும்.

பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.

அகில இந்திய லா ஜர்னல்

ஓர் உயரிய மாதாந்திர சட்டப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஹிந்துலா, பீனல்கோட், காண்ட்ராக்ட் ஆக்ட் (ஜமீன் ஜமீன்தார்கள் சம்பந்தமான) எஸ்டேட் லாண்டு ஆக்டு சிவில்புரோசிஜர்கோட் (விக்ரயம், அடமானம், தானம் முதலிய விஷயங்களைப்பற்றின) டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டு, (உண்டி, செக், புரோநோட் இவை சம்பந்தமான)நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட் முதலிய ஆக்டுகளின்கீழ் ப்ரீவிகௌன்சில், சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன், அலஹாபாத், லாகூர் முதலிய ஹைகோர்ட்டுகளில் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் அவைகளின் சாராம்சங்களும், தெளிவான தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சட்ட வியாசங்களுடன் வெளியாகி வருகின்றன. இப்பத்திரிகை ஜமீன்தார்கள், வியாபாரிகள், வக்கீல் குமாஸ்தாக்கள், கொடுக்கல் வாங்கல் வர்த்தகர்கள், பெடிஷன் எழுதுவோர் முதலிய வியாபாரஸ்தர்களுக்கு வெகு அவசியமானது. சட்ட விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். இப்பத்திரிகை மாதம் 1க்கு 64 பக்கங்களுக்குமேல் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. வக்கீல்களால் இயற்றப்பட்டு வருகின்றது. முதல் வால்யம் 1929-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பித்து வெளிவருகின்றது. சந்தாவிவரம், இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷசந்தா (முன்பணம்) தபால் சார்ஜ் உள்பட ரூ. 5. மற்ற இடங்களுக்கு 5.12.0. (ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தா கிடையாது) ஒரு வருஷத்திற்கு ஒரு வால்யம் முடியும். மாதிரி சஞ்சிகை 0—8—0 ஸ்டாம்புகளனுப்பினால், அனுப்பப்படும். மானேஜர்

அகில இந்திய லாஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர் செங்கல்பட்டு ஜில்லா.

(M. & S. M. Ry.)

காங்கிரஸ் 1930-31.
காலண்டர்.

படத்தின் அளவு 30" X 20"

இதுகாறும் காங்கிரஸ் மகா சபைக்கு தலைமைவகித்த தேச பக்தர்களின் உருவப் படங்கள் அமைந்துள்ளன. மேலும் பாரத மாதா படமும், கஜலக்ஷ்மி படமும் இருக்கின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் இன்றியமையாத உன்னத உருவப்படம்.

1	காப்பியின் விலை	அணா	0	9	0
3	,,	,, ரூபா	1	8	0
6	காப்பிகளின் விலை	,,	2	12	0
12	,,	,, ,,	5	0	0

தபாற் சிலவு 1 முதல் 12 காப்பி வரை அணா 4

சர்மா & கம்பெனி,

திருவல்லிக்கேணி, : : சென்னை.

ஹஸ்தரேகை சாஸ்திரம்

உமது கையிலிருக்கும் கோடுகளைக் கவனித்தீரா? உமக்கு வரப்போகும் நிகழ்ச்சிகளை அறிய ஆசையுண்டா?

அப்படியாயின், இப்புத்தகத்தை வாசியுங்கள். நீரே உமது சோதிடராவீர், மற்றவருடைய உதவி இல்லாமல் நீரே வாழ்க்கையின் பலன்களை அறிந்து உமது நண்பருக்கும் தெரிவிக்கலாம்.

இப்புத்தகம் பல மேல்நாட்டு கீழ்நாட்டு நூல்களைப் பரிசோதித்து முக்யமான விஷயங்களைத் திரட்டி எழுதப்பட்ட ஒரு நூல்.

சோதிடத்தை விட சிறந்து, பலன்கள் என்னவென்று உள்ளதை உள்ளபடியே உரைக்கும் இப்புத்தகம் விலை ரூபா 1 4 0

லலிதா விலாச புஸ்தக சாலை

திருவல்லிக்கேணி, சென்னை.

THE
Indian Railway Magazine, George Town, Madras.

The only monthly Magazine in India with the sole purpose of redressing railway grievances. Very useful to Merchants and the Public. Railway Law explained in simple language. ***Rs. THREE a Year.***

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ் பஹதூர் ஜெ. செல்வ ரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்' பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேசக்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி.பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்' ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாபேட்டை, சென்னை.

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்தது முதல் இதற்குள் நமது சந்தாதாரர்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதாரர்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்க்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப்பார்களென்று நம்புகிறோம்.

			பரிசு புத்தகங்கள்
(1)	ஒரு புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண	மனுப்புகிறவர்களுக்கு	மாதவமணி அல்லது அமிர்தமாலினி
(2)	2 புதிய சந்தாதாரர்களை	,,	வீரவஸந்தா
(3)	3 ,,	,,	கோபாலரத்னம்
(4)	4 ,,	,,	சுகந்தபுஷ்பம்
(5)	5 ,,	,,	கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை
(6)	6 ,,	,,	சண்பகவிஜயம்
(7)	7 ,,	,,	நவநீதகிருஷ்ணன்
(8)	8 ,,	,,	வைதேகி, அல்லது பத்ம சுந்தரன் அல்லது ராதாமணி

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. செம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.
அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0 பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

$18 \times 2\frac{3}{4}$ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

$18 \times 2\frac{3}{4}$ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3.0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சாக்கு வாங்குபவற்கு 1 ரூபாய்க்கு 0.1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி கேசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

கோபாலரத்னம், மாதவமணி.

அநேக சந்தாதார்கள், மேற்கண்ட இரண்டு புத்தகங்களையும் இதர புத்தகங்களைப் போல தமக்கு கொஞ்சம் விலை குறைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்வதால் அதற்கு இணங்கி அணு 14 முன்பணமனுப்புவோர்க்கு இரண்டு புத்தகங்களையும் தபாற்செலவின்றி அனுப்புவோம். வி. பி யில் அனுப்ப முடியாது.

50 காபிகளே இந்த விலைக்கு அனுப்ப முடியுமாதலால் வேண்டியவர்கள் உடனே முன்பணமனுப்பவும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி.

இரண்டாம் பதிப்பு.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

சென்ற டிசம்பர் மாதமே வெளியான "ராதாமணி" (ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது) முதற்பதிப்புக் காபிகள் இதற்குள் செலவாகிவிட்டதிலிருந்தே அதன் பெருமை நன்கு விளங்கும். கடைசிப்பக்கம் வரையில் கதையின் முடிவை ஊகிக்கமுடியாதபடி பிரமிப்பையுண்டாக்கும் துப்பறியும் நாவல் இதுதான். 2-பாகங்கள் விலை ரூ. 2—8—0. நமது சந்தா நேயர்களுக்கு ரூ. 2.

முன்பண மனுப்புவோர்க்கு தபாற்செலவு இனாம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

NOTICE.

We have authorised VANI VILAS BOOK DEPOT., 27, Ellis Road, Mount Road P. O. MADRAS, to secure subscribers and advertisements for our Journal and grant receipts on our behalf.

All our own publications can be had from them.

Manager,
"JAGANMOHINI".

வெளிவந்து விட்டன! வெளிவந்துவிட்டன !!

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய இரண்டு புதிய நாவல்கள்
(சித்திரப் படங்களுடன் கூடியவை)

சுகந்தபுஷ்பம் விலை ரூ-1
வீரவஸந்தா விலை அணா-8

முன் பண மனுப்பின் தபாற் செலவு இனாம்
வீரவஸந்தாவை தனியாக வி. பி யில் அநுப்ப முடியாது.

21020

"ஜகன் மோகினி" ஆபீஸ்
26 தேரடித் தெரு
திருவல்லிக்கேணி
சென்னை.

பரிசுகளின் விவரம்.

இம்மாத சஞ்சிகை வெளியாவதற்குள் சந்தாவுக்காகவும், "சுகந்தபுஷ்பம்", "வீரவஸந்தா" இரண்டிற்காகவும் பணமனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு ந.	ரூ.	சந்தா ந.	
1	5	N. 49.	Mr. M. Narayanan, Coimbatore.
2	5	K. 21.	Mr. R. Kothandapani Iyer, Unjalur.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களின் நம்பர்களையும் "சுகந்தபுஷ்பம்", "வீரவஸந்தா" இரண்டிற்கும் பணமனுப்புவோரின் நம்பர்களையும் குலுக்கிப்போட்டு 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

“ஜகன்மோகினி” யில் வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

	காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்)	ரூ.	4	0	0
மலர் II.	விலாஸவதி (2-பாகங்கள்)	ரூ.	3	0	0
	ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை				
	கனகசபை	ரூ.	1	8	0
	கோகிலம்	ரூ.	0	6	0
	ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை				
மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
மலர் VI.	நவநீதகிருஷ்ணன் ...	ரூ.	2	0	0
	சண்பக விஜயம்	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன்	ரூ.	1	12	0
	சுகந்தபுஷ்பம்	ரூ.	1	0	0
	கோபால ரத்னம் ...	ரூ.	0	14	0
	வீரவஸந்தா	ரூ.	0	8	0
	மாதவமணி	ரூ.	0	3	0

“ஜகன்மோகினி” சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன்	ரூ.	2	0	0
ராதாமணி	ரூ.	2	0	0
நவநீதகிருஷ்ணன்	ரூ.	1	12	0
சண்பகவிஜயம்	ரூ.	1	8	0
கௌரீமுகுந்தன் —	ரூ.	1	8	0

“ஜகன்மோகினி” ஆபீஸ்

26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

இனும் தபாற்செலவு **இனும்**

இரண்டு அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு “போலீஸ் கிலி போதிராயர்” “ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப்” என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

மதனசிங்கர்	ரூ.	1	0	0.	மர்மமுகி	ரூ.	0	12	0
சுந்தரவதனி	ரூ.	0	12	0	வஸந்தசமுத்ரம்	ரூ.	0	12	0
மஞ்சுளா	ரூ.	0	6	0	அமிருதமாலினி	ரூ.	0	4	0

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

“ஜகன்மோகினி” யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.